ஓம்

பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக; அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்."

MAHA... DR. U. V. S... BESANT NAGAR ... MADRAS

மலர் 4. சென்னை, 1936ஹு செப்டம்பர்மீ 1உ இதழ் 11.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	காங்கிரஸ் வீர முரசு	2
2.	காலச் சக்கரம்	4
3.	வைஸ்ராய் லார்டு லின்லிதோவுக்கு பகிரங்க கடிதம்	6
4.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	8
5.	இணையற்ற காதல்	13
6.	மூன்று வைரங்கள்	17
7.	"இன்னும் ஒரு காதந்தான்"	21
8.	அதிசய முத்தம்	25
9.	வறுமைக் கொடுமை	29
10.	சக—கமலம்	33
11.	கொலேஞர் மகாநாடு (பாட்டு)	36
12.	மங்கள விலாசத்தின் மர்மம்	39
13.	மணிக்கெதிரில் பிசாசு!	44
14.	நண்பர் நகைவிருந்து	47
15.	ஆடல் பாடல்	49

"விகடனி"ல் வரும் பெயர்க ளெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

காங்கிரஸ் வீர முரசு

"விடுதலைப் போராட்டத்துக்கு ஒற்றுமை இன்றியமையாததாகும். அவ்வொரு ஒற்றுமைக்கு, காங்கிரஸ் மகாசபை இடங்கொடுக்கிறது. இந்தியா விடுதலையடைய வேண்டும். நம் மக்கள் சுரண்டப் படுவது நிற்க வேண்டும். பாமர மக்களின் நன்மையை அடிப்படையாகக் கொண்டு, பலம் பொருந்தியதும், ஒற்றுமையுடையதுமான ஓர் தேசிய சமூகத்தை நிர்மாணிக்க வேண்டும். இந்த ஒரே நோக்கத்தோடு தான் காங்கிரஸிலுள்ள பல்வேறு சாதியினரும், வகுப்பினரும் ஒன்றாகப் பிணைக்கப் பட்டிருக்கிறார்கள்." காங்கிரஸ் தேர்தல் அறிக்கை.

காங்கிரஸ் மகாசபை வீரமுரசு கொட்டி விட்டது. தேச மகாஜனங்களே! வீறிட்டு எழுங்கள். போருக்கு ஆயத்த மாகுங்கள். காங்கிரஸ் விரோதிகள் இருக்குமிடந் தெரியாமல் ஓடியொளியவும் காங்கிரஸ் தன்னிகரில்லா வெற்றி பெற்று வாகைமாலை சூடவும் வேண்டுமென்ற ஆர்வத்தோடு உடனே புறப்படுங்கள்.

சமீபத்தில் நம் நாட்டில் பொதுத் தேர்தல் நடக்கப் போவது அனைவருக்கும் தெரிந்த விஷயம். பிரிட்டிஷ்—இந்திய சர்க்காரால் இந்தியாவுக்கு வழங்கப் பட்டிருக்கும் புதிய அரசியல் சீர் திருத்தத்தின் படி இப் பொதுத் தேர்தல் நடைபெறப் போகிறது. ஆகவே, பொதுத் தேர்தலில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்காக, நம் நாட்டிலுள்ள சகல கட்சிகளும் அவசர அவசரமாக ஆயத்தமாய்க் கொண்டிருப்பதையோ, புற்றீசல்போல தினந்தோறும் புதுப் புது கட்சிகள் தோன்றிக்கொண்டிருப்பதையோ கண்டு யாரும் ஆச்சரியப் படுவதற்கில்லை. காங்கிரஸும் பிற கட்சிகளும், தேர்தலில் கலந்துகொள்ளும் விஷயத்தில் அடிப்படையிலேயே வித்தியாசமுண்டு. மற்ற கட்சியார் புதிய அரசியல் சீர்திருத்தம் எவ்வளவு மோசமானதாயிருந்தாலும், கிடைத்ததை விடக்கூடாதென்று அதை இரு கைகளாலும் வரவேற்று தாங்கி நடத்திக்காட்டிச் சர்க்காருக்கு நல்ல பிள்ளைகளாகப் பெயரெடுத்து தங்கள் வரையில் நலனடையப் பார்க்கின்றனர். காங்கிரஸோ, புதிய அரசியல் சீர்திருத்தத்தால் ஏழை இந்திய மக்களுக்கு எள்ளளவும் நன்மையில்லையென்பதை நிரூபித்துக் காட்டவேண்டி, சீர்திருத்தம் அமுலுக்கு வாவொட்டாதபடி முட்டுக்கட்டை போட முயல்கிறது. இவ் விருதிறக் கட்சிகளில், எக் கட்சியின் நோக்கைப் பொதுமக்கள் ஆதரிக்கிறார்கள் என்பது பொதுத் தேர்தலின் முடிவில் தெரிந்துவிடும்.

இப் பொதுத்தேர்தலில் தான் கலந்து கொள்ளப் போவதைத் தேச மகாஜனங்களுக்கு முன்னதாகத் தெரிவிக்க வேண்டியே காங்கிரஸ் மகாசபை சங்கநாதஞ் செய்து விட்டது. அம் முழக்கத்தைக் கேட்ட பின்னர், தேச மகாஜனங்கள் வாளா இருப்பார்களோ! சர்தார் வல்லபாய் படேலை, தலைமையாகக் கொண்ட காங்கிரஸ் பார்லிமெண்டரி போர்டார் சில காலத்துக்கு முன் தேர்தல் விண்ணப்ப அறிக்கை யொன்றைத் தயாரித்தனர். அவ்வறிக்கை, இரண்டு வாரத்துக்கு முன் பம்பாயில் கூடிய காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அக் கமிட்டியார் அத் தேர்தல் அறிக்கையை ஒவ்வொரு பகுதியாக ஆராய்ந்து

சீர்தூக்கிப் பார்த்து திருப்தி யடைந்து கடைசியாக, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பித்தனர். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் அவ்வறிக்கையை ஏக மனதாக ஏற்றுக் கொண்டனர். அதிக வாதத்துக் கிடமின்றி, திருத்தங்களுக்கு இடமின்றிப் பலவித அபிப்பிராய பேதங்களும், கொள்கைகளு முடைய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் அப்படியே அங்கீகாரஞ் செய்ததி லிருந்து அவ் வறிக்கை எவ்வளவு ஜாக்கிரதையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிற தென்பதை நேயர்கள் தெரிந்துகொள்ளலாம். அதிதீவிர வாதிகளான காங்கிரஸ் சமதர்மிகள் கூட இவ் வறிக்கை விஷயத்தில் பரம திருப்தி யுடையவர்களா யிருக்கின்றனர் என்றால், அதிகங் கூறவும் வேண்டுமோ !

காங்கிரஸ் தேர்தல் விண்ணப்ப அறிக்கையில், இரு விஷயங்கள் முக்கியமாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. அவை, காங்கிரஸின் பொதுப்படையான இலட்சியம் இன்ன தென்பதும், சுயராஜ்யத்தின் வாயிலாகப் பொது மக்களுக்குச் சாதித்துக் கொடுக்க எண்ணி யிருப்பது இன்ன தென்பதுமாகும். அதுவன்றி, அவ் வறிக்கை விவசாயிகள் கடன் பளு, நிலவரி முறை, தேசத்தின் பொருளாதாரக் கஷ்டம், பெண்ணுரிமை, தீண்டாமை யொழிப்பு, வகுப்புத் தீர்ப்பு, காச்சி காங்கிரஸின் ஜீவாதார உரிமைத் தீர்மானம் முதலிய முக்கிய விஷயங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்து ஒருவித முடிவு கூறப்பட்டிருக்கிறது. வகுப்பு தீர்ப்பு விஷயத்தில் நடுவு நிலைமை வகித்து வந்த காரணத்தால் காங்கிரஸ் மீது அதிருப்தி கொண்டிருந்தவர்களும், காங்கிரஸ் வேலைத் திட்டத்தில் தீவிரமில்லை யென்ற சமதர்ம வாதிகளும் கூட திருப்தி யடையும்படி இவ்வறிக்கை அமைந்திருக்கிறது. பொதுவாகப் பார்த்தால், "காங்கிரஸ் சுயராஜ்யத்தைக் கோருவது ஏன்?" என்ற விஷயம் இவ் வறிக்கையில் மிகவுந் தெளிவாக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இவ்வறிக்கையை அமைதியாகப் படித்துப் பார்க்கும் பொதுமக்கள் யாவரும் பொதுத்தேர்தலில் காங்கிரஸுக்கே ஏகமனதாக வாக்களித்து முழுவெற்றியைத் தர முன் வருவார்க ளென்பது திண்ணம்.

மேலும், இவ் வறிக்கை காங்கிரஸ் கடந்த ஐம்பது வருஷங்களாக நாட்டுக்குச் செய்துள்ள சேவைகளையும், விடுதலைப் போராட்டங்களையும் பற்றி விளக்கமாகக் கூறிவிட்டு, இப்போது காங்கிரஸ் மாகாண சட்டசபைகளில் புகும் நோக்கங்களைப் பின்வருமாறு தெரிவிக்கிறது:—

"புதிய சட்டத்தை நிராகரிப்பதும், அதை நடத்தி வைக்காமல் முட்டுக்கட்டை போடுவதுமே காங்கிரஸின் நோக்கம். அதே சமயத்தில், சமஷ்டி மத்திய சபைகளுக்கு மாகாண அசெம்பிளிகள்தான் தேர்தல் தொகுதிகள் என்பதை மறந்து விடக்கூடாது. மாகாண அசெம்பிளிகள் அமைவதின் தன்மை சமஷ்டி சபையைப் பெரிதும் பாதிக்கும்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்தை நிரந்தரமாக்கும் நோக்கத்துடனும், எந்த முன்னேற்றத்தையும் தடை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடனும் சிருஷ்டிக்கப் பட்டிருக்கும் சமஷ்டித் திட்டம் அமுலுக்கு வாராமல் தடுப்பதற்கு, காங்கிரஸ் மாகாண அசெம்பிளிகளைக் கைப்பற்றிய பின் எல்லா முயற்சிகளும் செய்யப்படும்."

எனவே, காங்கிரஸ் புதிய அரசியல் சீர்திருத்தத்தைத் தகர்த் தெறிவதற்காகவேதான் சட்டசபைகளைக் கைப்பற்ற முன் வந்திருப்பதாகப் பகிரங்கமாகக் கூறிவிட்டுத் தேர்தலில் இறங்கி யிருக்கிறது. ஐரோப்பாவில் யுத்த முடி[illegible]ல்லரசுகள் தன்மீது சுமத்திய வர்[illegible]ல்ஸ் ஒப்பந்தத்தை எந்தக் கட்சி தகர்[illegible]தறிவதாகக் கூறித் தேர்தலில் நிற்கிற[illegible] அக் கட்சியையே ஜெர்மெனியும், அந்நாட்டு மக்களும் ஆதரித்து வருவதுபோல், புதிய சீர்திருத்தத்தை உடைத்தெறிவதாகக் கூ[illegible] வரும் காங்கிரஸை இந்தியாவும், இந்[illegible] மக்களும் அவசியம் ஆதரிப்பார்கள் [illegible]றும், காங்கிரஸுக்கு ஜெய [illegible] பேரி[illegible] அடிப்பார்களென்றும் "விகடன்" [illegible] [illegible]. காங்கிரஸ் [illegible] வா[illegible]

காலச் சக்கரம்

இந்த திருச்சி சம்பவம்!

அப்பாடா! இந்த திருச்சி—தென்னிந்தியாவில் ஒரு சிறு ஜில்லாவான திருச்சி-யில் நடந்த ஒரு சிறு சம்பவம் எவ்வளவு பெரிய பிரமாதத்துக் கெல்லாம் இடம் தந்து விட்டது. திருச்சி நகர சபை தலைவர் தேர்தலில் நடந்த விபரீத சம்பவம் இந்தியா முழுவதையு மன்றே ஒரு ஆட்டம் ஆட்டி வைத்து விட்டது. அதை நினைத்தாலே 'விகட'னுக்கு ஆச்சரியமா யிருக்கிறது. வேலூர் ஜில்லாபோர்டிலுந்தான் தலைவர் தேர்தலில் கோளாறு ஏற்பட்டது. திருச்சி நகரசபையில் கட்டுப்பாட்டை மீறினும், காங்கிரஸ்காரொருவரே தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆனல் வேலூரில் காங்கிரஸ் கட்சிக்கு மாறுபட்ட வேரொருவர் தலைவராக வந்தார். அவ் விபரீதத்தின் பலன் 22 காங்கிரஸ்காரர்கள் ராஜிநாமாவோடு போயிற்று. இத் திருச்சி சம்பவமோ தென்னட்டுக்கே அரும்பெருந் தலைவாக விளங்கிய சக்கிரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரைக் காங்கிரஸின் முக்கிய பதவிகளிலிருந்து நீங்கும்படி செய்து விட்டது. இச் சம்பவம் ஸ்ரீஜத் ராஜாஜியை மனமுடையும்படி செய்து விட்டது. திருச்சியின் விபரீத நிலைவு தமிழ் நாட்டுக்கே—ஏன்? இந்தியாவுக்கே—ஒரு பெரிய கஷ்டத்தை விளைவித்து விட்டது. இதை நம் நாடு செய்த துரதிர்ஷ்டம் என்னுது வேறென்ன வென்று கூறுவது?

* * *

எல்லாம் நன்மைக்கே

திருச்சி சம்பவமும், ராஜாஜீ ராஜினமா விஷயமும் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் ஆலோசிக்கப்பட்டன. காங்கிரஸ் தலைவர் பண்டித ஜவஹர்லாலும், ஸ்ரீ வல்லபாய் படேலும், பாபுராஜேந்திரர் முதலியவர்களும் ராஜிநாமாவைப் புனராலோசனை செய்யும்படி எவ்வளவோ ராஜாஜீயைக் கேட்டுக் கொண்டனர். ஆயினும், [illegible] புனராலோசனைக்கு இடமே யில்லை யென கூறிவிட்டார். எனவே, கமிட்டி வருத்தத்தோடு அவரது ராஜிநாமாவை ஏற்றுக் கொண்டது. டாக்டர் ராஜன் நடவடிக்கையை ஆலோசித்ததில் அவர் காங்கிரஸ் கட்டுப் பாட்டை மீறியது மன்னிக்க முடியாத தவறு என்றே கமிட்டி தீர்மானித்து விட்டது. இம் முடிவை "விகடன்" கடந்த இதழிலேயே கூறியிருப்பதை வாசகர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள். தேசத்துக்கு அரிய பெரிய தொண்டாற்றி வந்த டாக்டர் ராஜன் மீது குற்றஞ் சொல்லுதென்றால் யாருக்கும் தயக்கமே. தவறு செய்தவர் யாராயிருந்தாலும்—அவர்கள் பெரியவர்களா யிருந்தாலும் சிறியவர்களாயிருந்தாலுஞ் சரி—கண்டிக்கத் தக்கவர்களே! குற்றம் யார் செய்தாலுங் குற்றந்தானே! டாக்டர் ராஜன் தியாகி, அறிஞர் என்பதற்காகப் பலர் அவர் செயலை யாதரித்து வருகின்றனர். அதில் ஆச்சரிய மொன்று மில்லை. டாக்டர் ராஜன் காங்கிரஸ் நன்மைக்காகவே தாம் கட்டுப்பாட்டை மீறியதாக இன்னமும் வற்புறுத்திக் கூறி வந்தாலும், இனி அவரது அரசியல் வாழ்வு கலகலத்து விட்ட மாதிரிதான். திருச்சி சம்பவத்தால் பல மாறுதல்கள் ஏற்பட்டிருந்தாலும், எல்லாம் நன்மைக்கே நடந்திருப்பதாக எண்ணி "விகடன்" மன சாந்தி யடைகிறான்.

* * *

இங்கிலாந்து—எகிப்து சமரசம்

இந்தியாவுந்தான் பிரிட்டிஷ் ஆதிக்கத்தி னின்றும் விடுதலை யடைந்து சுதந்திரம் பெற வேண்டுமென்று பாடுபட்டு வருகிறது. இருந்தும் என்ன பிரயோஜனம்? எகிப்தைப் பாரு எகிப்து! எகிப்தும் இந்தியாவைப் போலவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆட்சிக் குட்பட்ட நாடாகத்தான் இதுவரை இருந்து வந்தது. ஆனல், இப்போதோ அந்த எகிப்து பூரண சுதந்திரமுடைய நாடாக

ஆகும் நிலைமை யடைந்திருக்கிறது? ஏன்? சுதந்தர நாடாகவே ஆய் விட்டதென்று கூடச் சொல்லலாம். இந்தியாவில் காங்கிரஸ் மகாசபை நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு வருவது போலவே, எகிப்திலும் அதன் விடுதலை கருதி தேசிய இயக்கமொன்று தோன்றித் தீவிரமாக வேலை செய்து வருகிறது. சமீபத்தில் அங்கு, பிரிட்டிஷ் பிரதிநிதிகள் தங்கள் சாம்ராஜ்ய நலன் கருதி ஏதோ ஒரு வகையில் ராஜதந்திரமுறைகளைக் கையாண்டதாகத் தெரிகிறது. இது எகிப்து மக்களுக்குப் பெரிதும் ஆத்திரத்தை யூட்டியது. அவர்கள் தீவிரமாகக் கிளர்ச்சி செய்து தங்கள் மனக்கொதிப்பையும், அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். இச் சமயத்தில்தான் எதியோபியாவுக்கும் இத்தாலிக்கும் யுத்தம் நடந்து கொண்டிருந்தது! பார்த்தது பிரிட்டிஷ் சிங்கம்! எகிப்தில் உள்நாட்டுக் கலக முழக்கம் அதன் பிடரி மயிரையும் குலுக்கி விட்டது. இத் தருணத்தில் தான் அலட்சியமாயிருந்தால், விஷயம் விபரீத நிலைக்குப் போய் விடக்கூடும் என அச்சங் கொண்டது பிரிட்டன். எனவே, அது எகிப்துடன் சமாஸப் பேச்சை நடத்தத் தொடங்கியது. நாலைந்து மாத காலம் இச் சமாஸப் பேச்சு நடந்து, கடைசியாக, இப்போது இங்கிலாந்தும் எகிப்தும் தமக்குள் சமாச ஒப்பந்தஞ்செய்து கொள்ள ஆயத்தமாகியிருக்கின்றன.

* * *

ஒப்பந்த விவரம்

இவ் வொப்பந்தத்தின்படி, பிரிட்டன் எகிப்து உள்நாடு சம்பந்தப் பட்ட மட்டில், பரிபூரண சுதந்திரத்தை அங்கீகரிப்பதோடு, இராணுவ பலத்தையும், சேனை பலத்தையும் பெருக்கிக் கொள்ளுவதற்கும் எகிப்துக்கு உரிமை யளித்திருக்கிறது. அதுவன்றி, வெளி நாடுகள் இவ்விரு தேசங்களில் எதன் மீது படையெடுத்து யுத்தத்துக்கு வந்தாலும், அவைகளோடு போர் புரிந்து முறியடிக்கும் விஷயத்தில் இவ்விரண்டும் ஒன்று சேர்ந்து கொள்ள வேண்டுமென்றும் ஒப்பந்தஞ் செய்து கொண்டிருக்கின்றன. எகிப்தும், பிரிட்டன் மத்தியதரைக் கடலில் தன்னுரிமை பாதுகாப்புக்காக, இராணுவப்படைகளை அலெக்ஸாண்டிரா துறைமுகத்தில் நிறுத்தி வைத்து கொள்வதில் தனக்கு ஆட்சேப மில்லை என அநுமதித்திருக்கிறது. இவ் வொப்பந்தம் முடிந்தவுடன் எகிப்து சர்வதேசத்தில் அங்கம் பெறவும் முயற்சி செய்யப் போவதாகத் தெரிகிறது. யுத்த விபரீதங்களுக்கு இடங் கொடுக்காமல், பிரிட்டனும், எகிப்தும் சமாச ஒப்பந்தஞ் செய்து கொள்ளும் விஷயத்தில் சவுஜன்னியமாகப் போய் விட்டதைக் கண்டு "விகடன்" அவைகளைப் பாராட்டுகிறான். சாமானியமாக எதற்கும் தலை வணங்காத பிரிட்டிஷ் சிங்கம் இவ்வளவு தூரம் விட்டுக் கொடுத்து எகிப்தோடு சமாசஞ் செய்து கொண்டதற்குக் காரணமென்ன? அந் நாட்டின் தேசிய இயக்கத்தின் தீவிர வேலையே யன்றோ! நம் இந்தியாவிலும் தேசிய இயக்கமான காங்கிரஸ் தீவிரமாகத்தானே வேலை செய்கிறது! ஏன்? நமது நாட்டு விஷயத்தில் மட்டும் பிரிட்டன் பராமுகமாயிருந்து வருகிறது என்றால் அதற்குக் காரண மில்லாமலில்லை. நமது நாட்டில் பிற்போக்கான கட்சிகள் பல இருந்து தேசிய இயக்கமான காங்கிரஸுக்கு முட்டுக் கட்டை போட்டு வருகின்றன. எகிப்தில் மட்டும் பல கட்சிகள் இல்லையா என்றால், இருக்கின்றன. ஆனால் அவை தேச விடுதலை விஷயத்தில் தேசிய இயக்கத்துக்குப் பேருதவியா யிருக்கின்றன. நம் நாட்டிலுள்ள பிறகட்சிகள்தான் அவ்வாறில்லையே! அவை ஏகாதிபத்திய ஆட்சியாளருடன் சேர்ந்து கொண்டல்லவா தேசிய இயக்கமான காங்கிரஸை நசுக்க உதவி புரிகின்றன! இக் நிலையில் நாம் பிரிட்டனைக் குறை கூறுவதில் என்ன பயன்? எகிப்தை உதாரணமாகக் கொண்டாயினும் நம் நாட்டிலுள்ள பிற கட்சியார் தேச விடுதலைக்குப் பாடுபடும் காங்கிரஸோடு ஒத்துழைக்க முன் வருவார்களா!

பகிரங்க கடிதம்

வைஸ்ராய் லார்டு லின்லிதோவுக்கு

இந்திய மக்களாகிய எங்களை வாழ்விக்க வந்த வைஸ்ராய் பிரபுவே!

தங்களுக்கு நீண்ட நாளாகக் கடிதமெழுத வேண்டுமென்று ஆசை. அது இப்போதுதான் முடிந்தது. தாங்கள் எங்கள் நாட்டிற்கு அரசப் பிரதிநிதியாக வந்தது முதல் தாங்கள் செய்து கொண்டுவரும் ஒவ்வொரு காரியத்தையும் நானும் கவனித்துக்கொண்டுதான் வருகிறேன். தாங்கள் இந்தியாவுக்கு வைஸ்ராயாக நியமிக்கப் பட்டதும், யாரோ சில பத்திரிகைகாரர்கள், இட்ட 'விவசாய வைஸ்ராய்' என்ற பெயரைத் தங்களது ஒவ்வொரு செயலிலும் நிலை நாட்டி வருகிறீர்கள்.

தாங்கள் சில வருஷங்களுக்கு முன் விவசாயக்கமிஷன் தலைவராக வந்து இந்தியாவின் மூலை முடுக்கிலுள்ள கிராமங்களை யெல்லாம் பார்வையிட்டு, இந்திய விவசாயிகள் நிலையை யறிந்து சென்றதை யானறிவேன். இந்திய பூமியில் அப்போது அடியெடுத்து வைத்த அதிர்ஷ்டம் தங்களுக்குக் கையேல் பலன் இப்போது கிடைத்து விட்டது.

தாங்கள் வந்தீர்களோ இல்லையோ இந்த காந்தி பேச்சு மூச்சு இல்லாது மூலையில் போய் அடங்கி விட்டார். அந்த மகாத்மா காந்தி எதற்கு எடுத்தாலும் கதர் கதர் என்று கதறிக் கொண்டிருந்தார். தாங்களோ வந்தநாள் முதலாய் ஒவ்வொரு பேச்சுக்கும் கிராமாபிவிருத்தி, கிராமாபிவிருத்தி என்று கூறி வருகிறீர்கள். மகாத்மா ஒரு கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டு 'கிராம புனருத்தாரண வேலை' யென்று கிராமங்கள் தோறும் ஆரம்பித்ததற்குப் போட்டியாக, தாங்கள் தங்கள் சிப்பந்திகளைக்

கொண்டு பிரசாரஞ் செய்ய வைத்து அவருக்குச் செல்வாக்கு ஏற்படாதபடி பண்ணி விட்டீர்கள். இனி, அந்த பொக்கை வாய்க் கிழவருக்கு வேலை யேது? அவர் பேசாமல் சந்நியாசம் வாங்கிக் கொள்ளவேண்டியது தான்.

தாங்கள் சமீபத்தில் ஏற்படுத்தி யிருக்கும் திட்டம் இருக்கிறதே! பொலிகாளைகளை வாங்கி விவசாயிகளுக்குத் தானஞ் செய்வது, ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் புகட்டுவது என்பது; மிக அற்புதமான திட்டம். இது யாரோ சிலர் சொல்லுவது போல் வெறும் பகட்டுச் சமாசாரமாக மட்டும் இல்லாமலிருந்தால், இந்திய மக்களனைவரும் தங்களை அவர்களது குலதெய்வமாகக் கருதி வழிபடுவார்கள் என உறுதியாகக் கூறுவேன். ஆனால், இத் திட்டத்தால், பலநாள் பட்டினி கிடந்து உயிர் விடும் பரம தரித்திரர்களுக்கு விமோசன மேற்படுமா என்பது மட்டும் எனக்குச் சந்தேகமா யிருக்கிறது. அதற்கு மட்டும் தாங்கள் உண்மையில் வழி செய்து விட்டால், அப்புறம் எங்களுக்குச் சுயாராஜ்யமும் வேண்டாம்? அந்த காந்தியும் வேண்டாம். இது வரை காந்திஜீயைக் கண்மூடித் தனமாகப் பின்பற்றிவரும் மக்களெல்லாம் கூடத் தங்களைக் கட்டாயம் பின் பற்றிப் போற்றிப் புகழ்வார்கள். இது சத்தியம்; முக்காலும் சத்தியம்.

இப்படிக்கு,
அற்ப சந்தோஷி
அம்பலவாணன்.

"பீபிள்ஸ் பார்ட்டி" ஜண்டா



பித்தாபுரம் மகாராஜா, தமது கட்சிக் கொள்கைகளாகிய குதிரைகள் மீது ஆரோகணித்து இரு ஜண்டாக்களைப் பறக்க விட்டிருக்கிறார். இந்த ஜண்டாக்கள் எவ்வளவு காலம் பறக்கு மென்பது போகப் போகத்தான் தெரியும்.

சீமாட்டி கார்த்தியாயினி

("ஜீவா")

கோடைக்கானல் குபேர பட்டினம் போல் விளங்கியது. கோடைக்கால வெப்பத்தைத் தணித்துக் கொள்ள வேண்டி நீலகிரிக்குச் சென்ற சர்க்கார் உயர்தர உத்தியோகஸ்தர்களும், செல்வச் சீமான்களும் சீமாட்டிகளும் போக, மற்ற உத்தியோகஸ்தர்களும், பணக்காரர்களும் இக் கோடைக் கானலுக்கு வந்து தங்கியிருந்தனர். இவர்களேயன்றி, கோடைக்கால விடுமுறை பெற்ற கலாசாலை போசிரியர்களும், மாணவர்களும் கூட இங்கு வந்து தங்கி உல்லாசமாகப் பொழுது போக்கலாயினர்.

கோடைக்கானல், நீலகிரியைப் போல் எப்போதும் பனி மிகுந்து அதிக குளிர்ச்சியைத் தந்து தேகத்தை நடுக்குவிக்காமலும், குற்றாலத்தைப் போல் சாதாரண கிராமாந்தரமாகக் காணப்படாமலும் சீதோஷ்ண நிலை சமமாய், பொதுஜன வாசத்துக்கு உகந்ததாய் ஏழை பணக்காரர் எவருக்கும் கவர்ச்சி தரத்தக்கதாய் இருந்து வருவதால், கோடைக்காலத்தில் பல பாகத்தில் வாழும் மக்கள் பெரும்பாலார் இவ் விடத்தை நாடி வந்து இரண்டொரு மாதங்கள் இனிது காலங் கழித்துச் செல்கின்றனர். அதிலும் நம் கதை நிகழ்ந்த அவ் வருஷம் வழக்கத்தைக் காட்டிலும் ஏராளமாக ஜனங்கள் திரண்டிருந்தனர். இங்கு வந்திருந்த மக்கள் அனைவரும் துன்பமே யறியாத தேவர்கள் போல் காணப்பட்டனர். இவ் வுல்லாச மக்களிடையே நமது கதா நாயகர்களான கார்த்தியாயினியும், சிவசைலமும் இருந்தனர் என்று வாசகர்களுக்குத் தெரிவிக்க வேண்டியது அநாவசியம்.

நம் புத்தம் புதுக்காதலர்கள் குற்றாலத்துக் குதூகல வாழ்க்கையை ருசி பார்த்து அநுபவித்தாயிற்று. இனி கோடைக்கானலில் அவர்கள் கோலாகலமாகச் சில காலம் இருக்க விரும்பினர். அவர்கள் ஜூலை மாத முதலில் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்கள் ஒரு சிறு பங்களாவை வாடகைக் கமர்த்திக்கொண்டு அங்கு வாழ்ந்து வந்தார்கள். சிவசைலம் கோடைக்கானலுக்கு உத்தியோக

தோரணையில் திவான் ஸர். பரமேஸ்வரம் பிள்ளையோடு இதற்கு முன் பல முறை வந்திருக்கிறான். ஆதலால், அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் அவனுக்கு அவ்வூர் வாசிகள் செய்து தந்தனர். ஆனால், சிவசைலம் தனக்கு உத்தியோக தோரணையிலோ மற்ற வகைகளிலோ அறிமுகமானவர்கள்—சிநேகிதர்களானவர்கள் கண்களில் அகப்படாமலிருக்க விரும்பி எச்சரிக்கையாக இருந்து வந்தான். ஏனென்றால், அவர்கள் இவன் கார்த்தியாயினியோடு இருப்பதைக் கண்டால், 'இவள் யார்? மனைவியா? விவாகமாய் விட்டதா? எப்போது? எங்களுக்கெல்லாம் ஏன் தெரிவிக்கவில்லை' யென்றெல்லாம் கேட்பார்களன்றோ? அப்படி கேட்கத் துணியாவிடினுஞ் சந்தேகிப்பார்களன்றோ? ஆகவே, இவ்வித வீண் சந்தேகங்களுக்கும், அநாவசியமான கேள்விகளுக்கும் இடங் கொடுக்க விரும்பவில்லை. எனவே, அவன் தனக்குத் தெரிந்தவர்கள் தன்னை எளிதில் அடையாளந் தெரிந்து கொள்ள முடியாதவாறு அவனது வழக்கத்துக்கு மாறான நடையுடை பாவனைகளோடு விளங்கினான். கார்த்தியாயினி சிவசைலத்தினுடைய அந்தரங்க நோக்கத்தை ஆராயவுமில்லை; சிறிதும் சம்சயிக்கவுமில்லை. அவள் அவனை இன்பமயமான கந்தருவ லோகத்திலிருந்து வந்த கந்தருவ புருஷனாகவே கருதி வந்தாளாகையால், அவள் அவனது ஒவ்வொரு செயலையும், சொல்லையும் உவப்போடு வரவேற்றாள். அச் சமயத்தில் அவளுக்கு இருந்து வந்த குறை யெல்லாம் தன் அருமருந் தன்ன மகன் அம்பிகாபதியின் பிரிவைத் தவிர வேறொரு குறை அவள் மனத்தில் இல்லை. அக் குறையும் ஆனந்த மிகுந்த இக் காதல் வாழ்க்கையில் மூழ்கடிக்கப்பட்டு வந்தது. கார்த்தியாயினியின் மனத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த இப் பிள்ளைப் பாசத்தைச் சிவசைலம் சில நாட்களிலேயே அறிந்து கொண்டு விட்டானாதலால், அப் பிரிவாற்றாமையை யெண்ணி வருந்துவதற்கு அவளுக்கு அவகாச மேற்படாதபடி ஒரு விநாடியும் விட்டுப் பிரியாதிருந்து வந்தான்.

இக் காதலர்களுக்குக் குற்றால வாழ்க்கை ஒரு விதத்தில் மகிழ்ச்சியைத் தந்தது; கோடைக்கானல் வாசம் மற்றொரு வகையில் பேரானந்தத்தை விளைத்து வந்தது. கோடைக்கானல் ஏரியில் இவர்கள் மாலை நேரங்களில் 'ஸ்டீம் லான்'சில் ஏறி உல்லாசமாகப் பொழுது போக்கி வந்தனர்.

ஒரு நாள் மாலை சிவசைலமும், கார்த்தியாயினியும் நாடகம் பார்ப்பதற்குக் கோடைகானலி லுள்ள தியேட்டரொன்றுக்குச் சென்றனர். அன்று அத் தியேட்டரில் அமெச்சூர் நடிகர்கள் ஒன்று சேர்ந்து "அநாதைப் பையன்" என்ற சமூக சம்பந்தமான நாடகமொன்றை நடத்தினர். கலைஞானமும், கல்வியறிவும் உடையவர்களும், உத்தியோக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுமான வாலிபர்கள் சிலர் இந் நாடகத்தில் முக்கிய பாத்திரங்களை மேற்கொண்டு நடிப்பது பிரமாதமாக விளம்பரஞ் செய்யப்பட்டிருந்ததால், ஏராளமான மக்கள்—முக்கியமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், செல்வந்தர்களும் சீமாட்டிகளுமே—குழுமியிருந்தனர்.

கார்த்தியாயினியும் சிவசைலமும் நாடக மேடைக்கு மிகச் சமீபத்தில் முன் வரிசையில் போடப் பட்டிருந்த சோபாவில் அமர்ந்திருந்தனர். மற்றும் அங்கு வந்திருந்த செல்வச் சீமான்களும், வாலிபர்களும் கார்த்தியாயினியின் பேரழகில் ஈடுபட்டு மயங்கி இமையா நாட்டங் கொண்டனர். அதுவன்றி, சிவசைலம், கார்த்தியாயினியின் இடையைக் கைகளால் தழுவிய வண்ணம் நெருங்கி யமர்ந்திருக்கும் விதமும் அவன் அவளோடு கொஞ்சிக் கொஞ்சிப் பேசும் தோரணையும் அவர்களைச் சுற்றி யமர்ந்துள்ளவர்களின் கவனங்களைக் கவர்ந்தது.

* * *

நாடகம் ஆரம்பமாயிற்று. நாடகத்தின் போக்கு மிகவும் ருசிகரமா யிருந்

தது. முத்துசாமி கவுண்டர் என்னும் செல்வச் சீமானின் ஒரே மகனான இரண்டு வயது குழந்தையை அவரது சகோதரனான இரத்தின சபாபதி கவுண்டர் பணப் பேராசை காரணமாக, தன் தமையன் சொத்து முழுவதையுந் தானே அடையக் கருதிச் சூழ்ச்சி செய்து ஒரு ஆள் மூலமாக வெளியேற்றி வெளியூரில் அனாதைப் பிள்ளையாக ஒரு பாதையில் போடச் செய்வதும், அக்குழந்தையை அவ் வூரிலுள்ள ஒரு ஏழைக் குடியானவன் கண்டெடுத்து தன் குழந்தை போல் வளர்த்து வருவதும், முத்துசாமி கவுண்டர் தம் குழந்தையைக் கண்டு பிடிக்க ஆள்களை எலாபக்கமும் விடுவதும், கடைசியாக ஒன்றும் பலிக்காமல் போகவே, திறமை வாய்ந்த துப்பறிபவரொருவரை அமர்த்திக் கண்டு பிடிக்கச் செய்வதும், பல வருடங்களாகியும் அத் துப்பறிபவராலுங் கண்டு பிடிக்கப் படாமல் போவதும், இதனிடையே குடியானத் தம்பதிகளால் ராஜ சேகரன் என்ற பெயரோடு அருமையாக வளர்க்கப்பட்டு வரும் சிறுவன் இருபது வயதடைவதும், அப் பருவத்தில் அவனது வளர்ப்பு பெற்றோர்களின் பெரு முயற்சியால் உயர்தரக் கல்வி பயின்று வருவதும், இக் கலாசாலை காலத்தில் அவனது வகுப்பில் வாசித்து வந்த ஒரு லட்சாதிபதியின் குமாரத்தி மிருநாளினியைக் காதலிப்பதும், அப் பெண்மணியும் ராஜசேகரனை மனமாரக் காதலிப்பதும், ஆனால், இவர்களது காதலுக்கு இடையூறாக மிருநாளினியின் தாய் நிற்பதும், அவள் தனது மகளுக்கும், ராஜசேகரனுக்கும் இடையே ஏற்பட்டுள்ள சம்பந்தத்தை ஒருவாறு அறிந்து கொண்டு அவர்கள் சிநேகத்துக்கு இடையூறு விளைப்பதும், ஏழைக் குடியானவன் மகனான ராஜசேகரனோடு லட்சாதிபதி குமாரியான தன் மகள் சிநேகஞ் செய்வதே கேவலமானதென்று மிருநாளினிக்கு அடிக்கடி எடுத்துக் கூறி அவள் மனதை மாற்ற முயல்வதும், இச்செய்தியைக் காதலி வாயிலாக அறிந்த ராஜசேகரன் தன் ஏழ்மை நிலைமைக்காக வருந்துவதும், இதே சமயத்தில் முத்துசாமி கவுண்டர் ஏற்படுத்தியிருந்த துப்பறிபவர் ராஜசேகரனை இன்னாரென அறிந்துகொண்டு உடனே கவுண்டருக்குத் தெரிவிப்பதும், தம் குமாரனை இனி இப்பிறப்பில் பார்க்க முடியாது என்று எண்ணி ஏங்கியிருந்த—உலகையே வெறுத்திருந்த-கவுண்டருக்கு தன் மகன் இன்ன இடத்தில் இன்னாரால் வளர்க்கப்பட்டு சுகமாகப் படித்துவருகிறானென்றறிந்ததும், புத்துயிரும், புத்துணர்ச்சியும் உண்டாவதும், அக்கணமே தனது சகோதரர் முதலியவர்களோடு புறப்பட்டு குடியானவரிடம் போய் தம் மகனைத் தமக்குத் திருப்பியளிக்கும்படிக் குறை பிரப்பதும், அக்குடியான தம்பதிகள் தங்கள் உயிரினும் சிறந்த பொருளாக மதித்துள்ள ராஜசேகரனைப் பிரிய மனமில்லாவிடினும் சொத்துக்குடையவர் வந்து கேட்கும்போது எப்படி மறுப்பதென்ற எண்ணத்தோடு அவனைக் கவுண்டரிடம் ஒப்படைப்பதும், இதுவரை இவ்வேழைக் குடியானவர்களே தனது பெற்றோர் எனக் கருதிவந்த ராஜசேகரன் உண்மையுணர்ந்து ஆச்சரிய முறுவதும், தன்னை இதுவரை அருமையாக வளர்த்தவர்களைத் திடீரென விட்டுப் பிரிய மனமில்லாது ராஜசேகரன் தனது வளர்ப்புப் பெற்றோர்களையும் உடன் வந்திருக்கும்படி யழைப்பதும், அவர்கள் தங்கள் ஏழ்மை நிலைக்கு அது பொருந்தாது எனக் கண்டிப்பாக மறுத்து விடுவதும், முத்தசாமி கவுண்டர் கொஞ்சம் பொருளை அக்குடியானவரிடங் கொடுக்க முயன்றும் அவர் வாங்காதிருந்து விடுவதும் கடைசியாக ராஜசேகரனும், குடியான தம்பதிகளும் ஒருவரிடப் ஒருவர் பிரியா விடைபெற்று கண்களில் நீர் ஆறாக வழிந்தோட சோகத்தோடு பிரிவதும், கவுண்டரும், மற்றவர்களுங் கூட இந் நிலையைக் கண்டு மன முருகுவதும், கடைசியாக முத்துசாமி கவுண்டர் தன் மகன் ராஜசேகரன் விரும்பிய மிருநாளினி (தாங்கள் நினைத்தபடி ராஜசேகரன் ஏழைக் குடியானவன் மகனல்லன்; ஒரு பெரிய பணக்காரரின் ஒரே புதல்வன் என்று அறிந்த பின்னர், மிருநாளினியின் பெற்றோர் அவனை ராஜ

சேகரனுக்கு கொடுக்கவுந் தயங்குவரோ !)ளை விவாகஞ்செய்து வைப்பதுமே நாடகத்தின் முடிவாகும்.)

* * *

இந் நாடகத்துக்குப் புத்துயிரளிக்கும் வகையில், நடிகர்கள் திறமையாக நடித்து பார்ப்பவர்கள் மனதைக் கவர்ந்தனர்.

காதல் நாடகத்தைக் களிப்புடன் புரிந்து கொண்டிருந்த நம் கதாநாயகர்களான கார்த்தியாயினியும், சிவசைலமும் இவ் வருமையான நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாடகத்துக்கு 'இண்டர்வெல்' விடப்பட்டது. இச் சமயத்தில் ரிஸர்வ் ஸீட் வரிசையில் மற்றொரு பக்கத்திலிருந்து யாரோ "சிவா ! சிவா !" என்று கூப்பிடுவதைக் கேட்டு சிவசைலம் திரும்பிப் பார்த்தான். அவனுக்கு உண்டான ஆச்சரியத்துக்கும், திகைப்புக்கும் அளவேயில்லை. அவனது தாயார் யாரோ சில பெண்மணிகளோடு உட்கார்ந்திருந்தார். உடனே சிவசைலம் கார்த்தியாயினியிடஞ் சொல்லிவிட்டு, அவனது தாயார் இருக்குமிடஞ் சென்றான். மகனும் தாயும் மிகவும் அளவளாவிப் பேசலாயினர்.

"அம்மா ! நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள் ?"

"திருவனந்தபுரத்தில் வேலையை விட்டுவிட்டு நீ ஏன் இங்கு வந்திருக்கிறாய் ?"

முதலில் அவர்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்ட கேள்வி இது தான். ஏககாலத்தில் இருவர் கேள்விகளும் எழுந்தமையால் அவற்றிற்குச் சரியான பதில் கிடைக்கவில்லை. சிவசைலம் பதில் சொல்லுவதுபோல் ஏதோ முணுமுணுக்கத் தொடங்கி மெல்ல மெல்ல வார்த்தைகளை விழுங்கலானான். வயது முதிர்ந்த அவனது தாயார், சிவசைலத்தினுடைய மழுப்பல் மொழியையும், தயக்கத்தையுங் கவனிக்கவில்லை.

அந்தம்மாள் தன் பக்கத்திலமர்ந்திருக்கும் பெண்மணிகளைச் சுட்டிக்
காட்டிப் பேசத்தொடங்கி, "சிவா ! இவ
கள் யாரென்று உனக்குத் தெரியுமா !—
இவள்தான் உனது மாமி. அதுதா
திருநெல்வேலியில் எனது சிற்றப்ப
பிள்ளை சிவசுப்பிரமணியம் என்று ஒ
வன் செல்வத்தோடும், செல்வா
கோடும் வாழ்ந்து வருகிறான் என்
உனக்கு அடிக்கடி சொல்லுவேன் பா
அவனுடைய மனைவி. இதோ இருப்பவ
அவனது அருமை மகள்; ஒரே பெண்
இவளை நன்றாகப் படிக்கவைத்திருக்கிறா
இச்சிறு பையன்கள் அவனது குமா
கள். இவர்களுக்குத் தான் சமீபத்தி
கர்ணபூஷணச் சடங்கு நடந்தது. அத
காகத்தான் என் தம்பி என்னை வ
வழைத்திருந்தான். நீ வேலை செய்யு
ஊர் அவனுக்குத் தெரியாதாகையா
உனக்குந் தெரிவித்து உடனழைத்
வரும்படி தகவல் எழுதியிருந்தா
திருவனந்தபுரத்துக்கும், திருநெல்வே
குஞ் சமீபந் தானே ! நீ கூட வந்திருக்
லாம். உனக்கு வேலையில் லீவு கிடை
குமோ கிடைக்காதோ என்ற சந்தேக
தாலேயே நான் தெரிவிக்கவில்லை.—
அவ் விசேஷம் முடிந்ததும் எல்லோ
மாகக் கோடைக்காலக் கொடுமையினி
றுந் தப்பிச் சுகமாகக் காலங் கழிப்பத
காக, இங்கு ஒரு வாரத்துக்கு முன் வ
தோம். இன்று இந்நாடகத்துக்கு எ
ளைக் கொண்டு வந்து விட்டு விட்டு, ஏ
ஜோலியைக் கவனிக்க வேண்டுமென்
உன் மாமா போய்விட்டான். இங்
நான் உன்னைச் சந்திப்பேனென்று க
லும் நினைக்கவே இல்லை—உன் மாமிதா
உன்னை எப்படியோ அடையாளங் கண்
பிடித்துக் கூறினாள்.—எனக்குக் கண்
யாகத் தெரிகிறதா என்ன ?—மருமகனை
கண்டுபிடிப்பதில் மாமிக்குத்தானே அ
சிரத்தை ?........" என்று கூறிப் பொக்
வாய் நன்கு தெரியும்படி சிரித்தார். மா
யம்மாளும் புன்னகை கொண்டாள். தி
புரசுந்தரி என்னும் பெயருடைய அ
பெண்ணும் வெட்கத்தால் தலை குன
தாள். ஆயினும் அவள் கடைக்கண்ணா
சிவசைலத்தை அடிக்கடி நோக்கினாள்.

ஆரம்பத்தில் தன் தாயோடு பேசிக்
காண்டே கார்த்தியாயினி யிருக்கும்
க்கமாகக் கவனித்துக் கொண்டிருந்த
ிவசைலம் தன் தாயின் அருகில் அமர்ந்
ிருக்கும் மங்கை தனது ஒன்று விட்ட
ும்மானது மகள் என்று அறிவிக்கப்
ட்டதும், அவளை எதிட்டுப் பார்த்தான்.
வனது நோக்கில் ஒருவித அர்த்தம்
ிருந்தது.

சிவசைலத்தின் தாய் அவனிடம்
நெருங்கிக் காதோடு காதாக, "சிவா! நீ
. ஏ. பாஸ் செய்து உத்தியோகத்தி
ிருப்பதைக் கேட்டு உன் மாமன் மிகவுஞ்
சந்தோஷ மடைந்திருக்கிறான். அவனது
பெண்ணை உனக்குக் கொடுக்க அவனுக்
குக் கொள்ளை ஆசை யிருக்கிறது என்
அபிப்பிராயத்தை மெல்லக் கேட்டான்.
எனக்குந் திருப்தியாய்த்தான் இருக்
கிறது. உனக்கு எப்படி யிருக்கிறது?
பெண் கண்ணுக்கு லட்சணமாகவும் அழ
காகவும் இருக்கிறாள் இல்லையா? அத
ுடன் நன்றாகப் படித்தும் இருக்கிறாள்.
அப்பனுக்கு ஒரே பெண். உன் மாம
னுக்கு ஏராளமாகப் பண மிருப்பதால்
நல்ல சீதனங் கிடைக்கும். என்ன சொல்
கிறாய்?........." என்று மெல்லக் கேட்
டாள்.

சிவசைலம் நெற்றியைப் பிசைந்து
கொண்டு பெருத்த யோசனையில் ஆழ்ந்
தான்.

கார்த்தியாயினி இவற்றை யெல்லாம்
கவனித்துக்கொண்டே யிருந்தாள். சிவ
சைலத்தின் தாய் தான் அவனோடு ஓடி
ந்த விட்டதை யறிந்தால் என்ன நினைப்
பாள் என்று எண்ணியபோது, அவள்
நெஞ்சில் சுருக்கென்று குத்தியது. அவர்
ள் பேசுந் தோரணையைப் பார்த்தால், தன்
னைப்பற்றிப் பேச்சு அங்கு நடக்கவில்லை
ன ஒருவாறு ஊகித்துக்கொண்டு
திருப்தி யடைந்தாள். சிவசைலத்தின்
தாய் தன் மகனுக்கு தம்பி மகளை அறி
முகப்படுத்தி வைத்து பேசுவதைக் கண்ட
ும் இவள் மனம் என்னென்னவோ பல
ிதமாக எண்ணி ஏங்கியது.

இந் நிலைமையில் கார்த்தியாயினியின் பக்கத்து சோபாவில் அமர்ந்திருந்த ஒரு கனவான் சிவசைலம் எழுந்து போனதை யறிந்ததும், மெல்ல இவளிடம் பேச்சு கொடுக்கலானார். ஆனால், கார்த்தியாயினி அதற் கிடங் கொடுக்கவில்லை.

நாடகம் மீண்டும் ஆரம்பமாயிற்று. கார்த்தியாயினி நாடகத்தைக் கவனிக்கலானாள். இந் நாடகத்தின் போக்கு பிள்ளையின் பிரிவால் வாடி வருந்தும் அவளது மனநிலையைப் பிரதிபலித்துக் காட்டுவதுபோ லிருந்ததால், மிக ஊக்கமாக அதை முதலிலிருந்தே அவள் பார்த்து வந்தாள். அதனாலேயே, சிவசைலத்தின் இடைவிடாப் பேச்சிலும் அவள் அசிரத்தை காட்டலானாள்.

நாடகத்தில் ராஜ சேகரனை அவனது உண்மைப் பெற்றோர் கண்டு பிடித்து குடியான தம்பதிகளிடமிருந்து அழைத்துப் போகுங் கட்டம் வந்தது. இக்கட்டத்தில் வளர்ப்புத் தந்தையான குடியானவன் ராஜ சேகரனைப் பிரிய—அதிலும் தன் தள்ளாத வயதில் பிரிய—மனமில்லாது வருந்துமிடத்தில் குடியானவன் வேடம் பூண்டவர், அந்நிலையை உண்மையாகவே அநுபவிப்பவர் போல் சோக பாவத்தை நன்கு வெளிப்படுத்தி நடித்தார். முத்துசாமி கவுண்டர் பிரியா விடைபெற்று ராஜசேகரனை அழைத்துச் செல்லுகையில், குடியானவன் "சேகர்! சேகர்!! சேகர்!!!" என்று கைகளை நீட்டிக் கதறிக்கொண்டே மூர்ச்சையாய் விழுந்தான்.

இச்சோக பாவமான கட்டம் நாடகம் பார்ப்போர் யாவர் மனதையும் உருக்கி விட்டது. கார்த்தியாயினி உண்மையிலேயே மனங் கரைந்து அழுது விட்டாள். இத்தனை நாட்களாகப் புதுக்காதல் வெள்ளத்தில் மூழ்கியிருந்த பிள்ளைப் பாசம் இச்சமயம் மேலெழும்பி விட்டது. அவள் உணர்ச்சி வயப்பட்டு விட்டாள். குடியானவன் "சேகர்! சேகர்!!" எனக் கதறி விழும்போது, இங்கு இவளும் தன்னை மறந்து "அம்பி! அம்பி!! என் ராஜா" என்று வாய்விட்டுக் கதறிய வண்ணம்



இணையற்ற காதல்

("கண்ணாடி.")

தேவை

ஓர் கிராமத்தில் தர்ம பள்ளிக் கூடத்தில் ஏழாவது வகுப்பு (III form) வரையில் பாடம் கற்பிக்க ஓர் உபாத்தியாயர் தேவை, சம்பளம் உயர்ந்தான். கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

விஸ்வநாத ஐயர்.
மிராசுதார்.
பசுந்தோட்டம் கிராமம்.

மூர்ச்சையாய் விழுந்து விட்டாள். இதைக் கண்டு சுற்றி யுட்கார்ந்திருந்த சீமான் சீமாட்டிகளெல்லாம் பதை பதைத்தெழுந்து அவளருகு சென்றனர். தாயோடு பேசிக்கொண்டிருந்த சிவ சைலமும் கார்த்தியாயினி அலறி விழுந்ததைக் கேட்டு ஓரே தாவாகத் தாவி ஓடி வந்தான்.

(தொடரும்)

குறிப்பு:—மேற்படி கிராமம் சி...... ஸ்டேஷனில் இறங்கி 15-மைல் மேற் சென்று ஓடத்தினால் கொள்ளிடத்தை கடந்தால் அக்கரையில் இருக்கிறது.

இவ்விதமான ஓர் விளம்பரம் இரவ தினசரி ஒன்றைப் பார்த்துக்கொண்டிருக் சுவாமிநாதன் கண்ணில் பட்டது. அவ உடனே பேப்பரை கீழே வைத்துவிட் ஒரு அப்ளிகேஷன் தயாரித்து கையோ தபாலாபீசில் சேர்த்துவிட்டு வந்தான் சுவாமிநாதன் பீ. ஏ. பட்டம் பெற்ற ஒ ஏழை (மேலே வாசிப்பதற்கு பணமில்லா முதலியார் வகுப்பைச் சேர்ந்த கண்ணி மான வாலிபன். பார்ப்பதற்கும் நடை யுடை பாவனையிலும் ஓர் வைதீக பிராம யுவனைப்போலவே காணப்படுவான். எ ருலும் அந்த உபாத்தியாயர் வேலை தன குக் கிடைக்குமா வென்பது அவனுக்கு சந்தேகந்தான். அவன் சந்தேகம் வீணா சந்தேகமே ஏனெனில் இரண்டு தினதி அவனை நேரில் வரும்படியாக உத்தி

ந்தது. தாமதமின்றி சுவாமிநாதன் பசுந் தோட்டம் என்ற அக்கிராமத்தை அடைந் தான். கொள்ளிடக் கரையிலுள்ள செழு மையுள்ள கிராமங்களில் அதுவும் ஒன்று.

அங்கே பெரும்பாலும் வைதிகப் பிராமணர்களே அதிகமாயிருந்தனர். அவர் ளில் கனம் விஸ்வநாத ஐயரவர்களே காழுத்த பணக்காரர். அவருக்கு ஆண் ந்ததியே இல்லை. கிளிபோன்ற ஓர் பெண் ட்டும் அவருக்கு உண்டு. அந்தக் ழந்தையையும் அவர் 7-வயதிலேயே வாகம் செய்வித்து 10-வது வயதில் ண்ணைப்பிடுங்கும் பால்ய விதவையாகக் ண்டார். இப்போது சாரதாவுக்கு 16 யது. கண்ணைப்பறிக்கும் மின்னற்கொடி பால் இருக்கிறாள். பிராமணசமூக ஆசா ப்படி அவளது சிகையை எடுத்து "மொட் ச்சி" ஆக ஆக்கிவிடுவதற்காக அக்கிர ரத்தில் கிளர்ச்சியும் சதியாலோசனையும் டந்து வந்தன.

"அறுத்துப்போன முண்டையை டி யெடுக்காமல் வைத்திருப்பதற்காக" ஸ்வநாதஐயருக்கு வைதிகர்களின் எதிர்ப் ம் பகிஷ்கரிப்பும் இருந்து வந்தது. இவர் ளை மெதுவாய் சரிப்படுத்துவதற்காக ஸ்வநாதஐயரும் தான். பணத்தை தாரா மாய் செலவுசெய்ய வேண்டியதாயிற்று. ந்த செலவில் தர்ம பள்ளிக்கூடமும் ன்று. இதில் உத்தியோகம் பெறவே து சுவாமிநாதனும் வந்தான்.

விசுவநாதஐயர் ஹாலில் உட்கார்ந்து தோ ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். அப் பாது சுவாமிநாதன் வந்து நமஸ்காரம் சால்லிக் கொண்டான்

"யார்? சுவாமிநாதன் நீர்தானா?" ன்று வரவேற்றார் ஐயர்வாள்.

"ஆம், நான்தான் தங்கள் உத்திரவு காரம் வந்து விட்டேன்" என்றான். வனை சிறிதுநேரம் திருப்தியோடு ஏற றங்க பார்த்தார்.

"பி. ஏ. பாஸ் ஆகிவிட்டதா"

"செய்துவிட்டேன்."

"ஆனால் இங்கே கிராமாந்திரத்தில் சொற்ப சம்பளத்தில் தான் வேலைபார்க்க வேண்டும். மாதம் ரூபாய் 15-க்குமேல் இப்போது கொடுக்க முடியாது. அதற்கு சம்மதமிருக்குமோ இல்லையோ?"

"தங்கள் அபிப்பிராயப்படி நடக்கச் சித்தமாய் இருக்கிறேன்" என்று மிக இனிமையான குரலில் பதில் தந்தான் சுவாமிநாதன்.

சுவாமிநாதனை பிராமணன் என்று எண்ணி இருந்த ஐயர்வாள், நீர் என்ன பிரஹ்ஜரணமா வாத்திமமா........" என்று ஆரம்பித்து சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்ளப் பார்த்தார்.

சுவாமிநாதனின் ஹிருதயம் சற்று நின்று மறுபடியும் துடிக்க ஆரம்பித்தது.

"நான்—முதலியார்—வகுப்பைச் சேர்த்தவன்" என்று நிதானமாகவும் அமைதியாகவும் சொன்னான் அவன்.

நிமிர்ந்து உட்கார்ந்திருந்த ஐயர் வாள் நடாரென்று சோபாவில் சாய்ந்து படுத்துக்கொண்டார். அப்போது ஐயர் வாளுக்குப் பின்னால் கதவு சப்தப்படவே சுவாமிநாதனுடைய கவனம் அங்கே சென்றது. மிகப் பிரகாசமான ஒரு சுந்தர வதனத்தில் இருந்து கொண்டு இரு விழி கள் அவனையே நோக்கின. "வேல்விழி" என்கிறார்களே கவிகள், அது மிகப்பொரு த்தமானதே. ஏனெனில் கூரிய இரண்டு வேலாயுதம் சுவாமிநாதனுடைய மார்பில் தைத்து ஊடுருவிப் பாய்ந்தது போலிருந் தது; அந்த பார்வையில் மதிமயங்கினான் சுவாமிநாதன். ஆனால் மறுவிநாடி அவன் முகத்தில் என்றுமில்லாத தேஜஸ் வீசியது. அவன் கண்களில் ஜீவகாந்த பொறி மின்னியது.

சோபாவில் சாய்ந்த ஐயர்வாளின் மனதில் அநேக எண்ணங்கள் ஓடின. அவைகளில் இந்த வைதிகப் பிரசுகள் என்ன பாடு படுத்துமோ என்ற அச்சமும் ஒன்று. "அவசியமில்லை" என்று அவர் உள்ளத்தின் ஊடே நின்று யாரோ சொல் வது போல் தோன்றியது.

"அவசியமில்லை; சுவாமிநாதன், நீ பள்ளிக்கூடத்தை ஒப்புக்கொண்டு நடத்திவை" என்று கடைசியாக வாக்களித்து விட்டார் ஐயர்வாள்.

சாரதாவும் சுவாமிநாதனும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்ட மாதிரியிலிருந்து இருவரும் காதலர்களாகி விட்டிருப்பார்கள் என்று நீங்கள் யூகித்திருப்பீர்கள். நூற்றுக்கு நூறுமார்க்கு! அது வாஸ்தவந்தான். இருவரும் பரிசுத்தமான காதல் பாசத்தால் கட்டுப்பட்டு விட்டனர். யார்தான் அதைத் தடுக்கமுடியும்?

அந்தரங்கத்தில் சந்திப்பு, காதல் ததும்பும் இன்ப சொற்கள் நிறைந்த காதல் கடிதங்கள், முத்தங்கள், ஆலிங்கனங்கள் முதலியன வழக்கம்போல் அவர்களுக்கும் உண்டாகியது. உலக வழக்கம்போல் சமாசாரமும் வெளிப்பட்டு ஊரும் புடைத்துவிட்டது. ஊர் முழுதும் இதே பேச்சுதான். சாரதாவை சுவாமிநாதன் விதவா விவாகம் செய்துகொள்ளப் போவதாகக்கூட வதந்தி பரவ ஆரம்பித்து விட்டது. இந்த விஷயம் விஸ்வநாத ஐயருடைய காதுக்கும் எட்டியது. அவர் என்ன செய்வார் பாவம். இப்பாழும் பிராமண சமூகம் ஒன்றுக்கும் இடம் தரவில்லையே! சாரதாவை பம்பாய் கல்கத்தா பக்கங்களில் உத்தியோகம் பார்க்கும் ஒருவரைப்பார்த்து காசுக்காக "ரீ மாரியேஜ்" செய்து கொடுத்து விடலாமா வென்பதாகக்கூட சிந்தித்தது உண்டு. சமூகக்கட்டுப்பாட்டை மீறிச்செய்ய அவருக்கு ஏது தைரியம்!

வைதீகர்களின் உபதேச மொழியில் ஐயர்வாள் ஈடுபட்டார்; சுய அறிவை இழந்தார்; பைங்கிளியைப் பங்கப்படுத்த சம்மதித்தார்; உத்தமனை ஊரைவிட்டு துரத்த ஒப்புக்கொண்டார்.

* * *

இர்வு சுமார் 12-மணி இருக்கலாம். "கண்ணே காரியம் மிஞ்சிப்போய் விட்டதே! நான் என்ன செய்வேன்! உன்னைவிட்டு எப்படிப் பிரிவேன்" என்று தயங்கினான் சுவாமிநாதன். காதலனின் மார்பில் சாய்ந்தபடி விம்மி விம்மி யழுது கொண்டிருந்தாள்.

பழுதற்ற அவள் நெஞ்சம் முதல் தடவையாக கலங்கி நின்றது.

"என்னைவிட்டு நீங்கள் போகக் கூடாது. உங்கள் முகத்தைப் பார்க்காமல் என்னால் ஒரு க்ஷணம்கூட இருக்க முடியாது" என்றாள் சாரதா. அவள் உள்ளத்தில் எழுந்த காதல் பெருக்கின் மகிமையை அதற்குமேல் எடுத்துச்சொல்ல அவளுக்குத் தெரியவில்லை.

"நான் ஒருவருக்கும் தெரியாமல் இன்றே போய் விடவேண்டுமென்பது உன் தந்தையாரின் கட்டளை. நான் அதை மீறி இன்னும் ஓர்நாள் இங்கே தாமதித்தால் உனக்கு அதனால் ஏதாவது இன்னல் விளைந்தால் என்ன செய்வது? அதுதானே எனக்குப் பயமாக இருக்கிறது. என்ன செய்யலாம் இந்த கஷ்டத்திற்கு? சாரதா! என்னை அடியோடு மறந்திருக்க உன்னால் முடியாதா? மறந்து விடேன். பிறகு உன் தந்தையாரின் சொல்படி கேட்டு சுகமே இருக்கலாமே! என்னால், இந்த அதிர்ஷ்ட மற்ற பாபியினால் உனக்கும் ஏன் கஷ்டம்? தலைவிதியா இது? சாரதா! என் கண்ணே! இன்றோடே என்னை மறந்து விடுகிறாயா? எங்கே! உன் வாயால் 'மறந்து விடுகிறேன்.' என்று சொல். அதைக் கேட்டுவிட்டு நானும் மறந்து விடுகிறேன் இப்பூலோகத்தையே" என்றான். நிறைந்த பிரவாகத்தோடு பயங்கரமாய் ஓடாநின்றகொள்ளிடத்தைநோக்கி அவன் கண்கள் அந்த காரிருளில் ஓடின. அப்போது கடவுளும் கோபமாக இருக்கிறார் என்பதுபோல வானத்தில் ஓர் இடி உறுமியது.

சாரதா தன் கரங்களால் தன் காதலனை நெருக்கிப்பிடித்து இறுக அணைத்துக் கொண்டாள். அவளது "வேல்விழி"யினின்றும் வழியும் கண்ணீர் சுவாமிநாதனின் மார்பைக் கழுவிக்கொண்டு ஓடியது.

"என்னையும் அழைத்துக் கொண்டு போய்விடுங்கள், இல்லாவிட்டால் கொள்ளிடத்தில் விழுந்து விடுவேன்! கட்டாயம் கட்டாயம்" என்றாள். அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. விம்மி விம்மி யழுதாள்.

சுவாமிநாதனின் மனக்கண் முன் அநேக பயங்கரத் தோற்றங்கள் தோன்றின. பின்னால் வரும் கஷ்ட நிஷ்டூரங்களும் முன் தோன்றி எச்சரித்தன. அவைகளை எல்லாம் சாரதாவுக்கு எடுத்துச் சொல்லி அவளை அதைரியப்படுத்த எண்ணினான். பூ! காதலின் வெறி (வெற்றி என்று சொல்லக்கூடாது) கொண்ட அவளா இதற்கெல்லாம் அஞ்சுகிறவள்!

கடைசியாக சாரதாவின் அழுகை மறந்தது ஏனெனில் இருவரும் அப்பொழுதே கொள்ளிடத்தை ஓடத்தால் கடந்து சி-ஸ்டேஷனுக்கு இரவிலேயே நடந்து சென்று ரயில் ஏறி சென்னைப்பட்டணத்திற்கு ஓடி விடுவதென முடிவு செய்து கொண்டார்கள்.

நடு நிசி. காரிருள். கொள்ளிடத்திலும் பிரவாகம் இருகரையும் புரண்டு பேரிரைச்சலுடன் ஓடிக்கொண்டிருந்தது. அத்தோடு வேகமான காற்றும் வீசிக்கொண்டிருந்தது. இந்த பயங்கரமான வேளையில் நினைத்தாலும் கர்ப்பம் கலங்கக்கூடிய அந்தக் கொள்ளிடம் பிரவாகத்தின் மத்தியில் ஓர் ஓடம் தத்தளித்துக் கொண்டிருந்தது. அதில் கலங்காத மனத்துடன் பிரயாணம் செய்தவர் யார் என்று நினைக்கின்றீர்கள்.. எல்லாம் நமது காதலர்களே!

சுவாமிநாதன் கொஞ்சமும் கலங்காமல் படகை சுழலின் வேகத்திலும் காற்றின் வேகத்திலும் கைவிடாமல் தள்ளிக்கொண்டே போனான். சாரதா இவன் இடுப்பைத் தன் கைகளால் கோத்துப் பிடித்தபடியே யிருந்தாள். ப்ரும்மஸமாஜம் ஆரிய ஸமாஜம் இவைகளில் சேர்ந்து ஜாதி மதவித்யாசம் இன்றி விவாகம் செய்து கொள்வதா? அல்லது பம்பாய் கல்கத்தா பக்கம் ஓடி மாறுபெயர் வைத்துக்கொண்டு வாழ்வதா? அல்லது பினாங்கு சிங்கப்பூர் முதலிய அயல் நாடுகளுக்கு செல்வதா? என்று பலபல எண்ணங்கள் சுவாமிநாதன் மனக்கண் முன் எழுந்தன. அப்போது படகு ஒரு சுழலில் அகப்பட்டு அப்பால் இப்பால் நகராமல் கிறுகிறுவென்று சுழல் ஆரம்பித்தது. சுவாமிநாதன் தன்னால் இயன்ற வரையில் பார்த்தான் முடியவில்லை. அவன் கைகள் சோர்ந்து விட்டன. அச்சமயம் ஒருகாற்று பலமாக வீசியது. அவ்வளவுதான். படகுக்குள் தண்ணீர் நிரம்பி ஓர் ஆட்டத்துடன் மூழ்கி மறைந்தது. "சாரதா என் கண்ணே!" என்ற ரீங்காரம் தான் எங்கும் ஒலித்தது. தேவி கொள்ளிடம் காதலர்களை தன்னுள் அடக்கம் செய்து கொண்டு விட்டாள்.

ஜாதி சமயக்கொடுமை நிறைந்த சமூகத்தை ஒழிக்கும் இப்பாழும் உலகத்தை விட்டு சமாசம் நிறைந்து சன்மார்க்கம் விளங்கும் வேறோர் உலகத்தை தேடிச் சென்ற அவர்களுடைய ஆன்மா சாந்தி யடையட்டும்!

மூன்று வைரங்கள்

(எஸ். முத்துஸ்வாமி.)

[இதே தலைப்பையுடைய நாவலின் ஆசிரியை இதைக் கண்டு ஏமாற்றமடைதற்கு இடமில்லை.]

பேய் பிசாசுகள் உலவும் நேரம்; ஒரே இருட்டில் சிறிதே ஒளி யிருந்தால் எங்கிருந்து வந்ததென அறியக்கூடாத ஓர் உருவம் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே ஓர் உயரமான மாளிகையி னெதிரில் வந்து நின்றது. இதுதான் வைர வியாபாரி ஜெகந்நாததாஸின் 'ஸ்ரீனிவாஸ்' என்னும் நாமமுள்ள அழகிய இல்லம். இவர் வைரங்களை மதிப்பிடுவதிலும் இரத்தினப்பரீக்ஷை செய்வதிலும் மிகத் தேர்ச்சி பெற்றவர். ஆதலால், வைரம், இரத்தினம் இவற்றின் மதிப்பை யறிதற் பொருட்டு பல திசைகளி லிருந்தும் பலர் இவரிடத்து வருவர். இத் தொழிலுக்குரிய நயவஞ்சகம் இவரிடத்துச் சிறிதும் கிடையாது. இக்கதை தொடரும் சமயம் இவரிடத்தில் மூன்று விலை யுயர்ந்த வைரங்கள் இருப்பதாக ஜனங்கள் பேசிக்கொண்டனர்.

அம் மாளிகையைச் சுற்றிலும் சுமார் பத்து அடி உயரமும் பன்னிரண்டு அங்குல அகலமும் உள்ள ஒரு கற்சுவர். இம் மதிலின் மேற்கு பாகத்தில் ஓர் உயரமானதும் பலமானதுமான இரும்புக் கதவு. இக் கதவுக்கருகில் ஓர் காவற்காரன். இவனையும் மீறினால் ஓர் பெரிய நாய். இத் தகைய பாதுகாப்புகளுடன் கூடிய இவ் வீட்டின் மதிலை ஒரே மூச்சில் மேலெழும்பித் தாண்டிற்று அவ் வுருவம். அங்கு உறங்கிக் கொண்டிருந்த காவற்காரனை நோக்கிக் குனிந்தது; அக் காவலாளி சிறிது அசைந்துவிட்டுப் பின் பிணம் போற் கிடந்தான். பிறகு அக் கட்டிடத்தைச்சுற்றி வரும்போது இடையில் ஒரு நாய் இதன் மீது பாய்ந்தது. 'ஜாக்' என்று அவ் வுருவம் விரலை ஆட்டியவுடன் அந்நாய் சாந்த மடைந்து சென்றுவிட்டது.

பின், அவ்வுருவம் அக் கட்டிடத்தின் கிழக்குப்புறம் வந்து அங்கிருந்து குரங்குபோற் பா பாவென்று மேலே ஏறி ஒரு ஜன்னலண்டை வந்தவுடன் நின்றது. அந்த ஜன்னற் கதவின் கண்ணாடியைச் சிறிதும் சத்தப்படாது அறுத்துவிட்டு அங்கிருந்த அறையினுட் குதித்தது. உடனே அதன் தோள்கள் மீது இரு அகலமான கைகள் போடப்பட்டன. இவ்வுருவம் திரும்பியது. அதே சமயம் 'பளிச்' சென்று அவ்வறை முழுதும் மின்சார வொளி பாவியது. கண்ணைக் குருடாக்கும் அந்த வெளிச்சத்தின் உதவியால், வந்த உருவம் முகமூடி யணிந்த ஓர் மனிதனென்றும், இவனுக்கெதிரில் இவனுக்கு நேராக கைத்துப்பாக்கியுடன் ஓர் வாலிபன் நிற்கிறானென்றும் அறிகிறோம். அந்த வாலிபனது தோற்றம் அவன் ஓர் செல்வச்சீமானின் புதல்வனென்பதைத் தெரிவிக்கிறது.

"கைமேலே செல்லட்டும். முன்னே ஒரு அடி எடுத்து வைத்தால்................" என்று அதிகாரத்துடன் கூறினன் அவ் வாலிபன் அவ்வுருவத்தின் கையில் தகுந்த ஆயுதம் இல்லை. என்ன செய்ய முடியும்? அவ்வாலிபன் அம் மனித னருகில் வந்து முகமூடியை விலக்கி முகத்தை யுற்று நோக்கிவிட்டு, 'ஓகோ, தாங்கள் தானே? பெரிய பழைய பெருச்சாளியே; பயம் வேண்டாம்; கீழே உட்காரும். இதோ இத் துப்பாக்கியை மேஜைமீது வைத்து விட்டேன். இங்கு என்ன காரியமாக எழுந்தருளினீர்?" என்று புன்னகை புரிந்தான்.

அந்த 'பழைய பெருச்சாளி'க்குக் கொஞ்சம் தைரியம் பிறந்தது. சாவதானமாகத் தொண்டையை கனைத்துக் கொண்டு, "நீர்தான் ஜெகந்நாததாஸின் செல்வப் புதல்வர் மோஹன்தாஸோ?" என்று கேட்டான்.

"உம்........நீர் ஊகித்தது சரியே; ஐயா வீரப்பரே, இன்னும் உமக்குப் பல திருநாமங்கள் உண்டே; அவை நினைவில்லை. எங்கு எக்காரியத்தை முன்னிட்டு வந்தீரோ அதை ஆரம்பியும்; நான் இல்லை என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று தலையாட்டினன் மோஹன்தாஸ் என்னப் பட்ட அவ்விளைஞன்.

"உமது தகப்பனர் மூன்று விலையுயர்ந்த வைரங்களை வைத்திருக்கிறாராமே; அவை இந்த அறையில்தான் இருக்கின்றனவா? அவை தாம் நான் விரும்பும் பொருள்" என்றான் வீரப்பன்.

"உமக்கு யார் சொன்னர்கள்?........ ஆமாம், இந்த அறையிலேதான் இருக்கிறதாக நினைத்துக்கொள்ளும்; அதை நம்பும். உம்.......உமது தொழிலை ஆரம்பியும்; நான் யாரையும் கூப்பிடுவதில்லை. உம்முடைய சாமர்த்தியத்தையும் புத்திக் கூர்மையையும் பரிசோதிப்பதற்காகவே நான் இவ்வாறு கூறுகிறேன். இந்த வீட்டிற்குள் எவ்வாறு நுழைந்தீர்?" அவ்வாலிபன் முகத்தில் வியப்பும் திகைப்பும் வழிந்தோடியது.

"காவல்காரனை மயக்கி விட்டேன்; நாய்க்கும் எனக்கும் ரொம்ப பழக்கம்" வீரப்பனுக்கு எல்லோரையும் தெரியும். சமயத்திற் கேற்றபடி அவன் ஜமீன்தாராகவும், போலீஸ் இன்ஸ்பெக்டாரகவும் இருந்திருக்கிறான். இத்தகைய மனிதன் உடனே அவ் வறையை ஒரு முறை கூர்ந்து கவனித்தான். மேஜையின் கால்களைக் கையால் தடவிக்கொண்டே ஓரிடத்தில் அழுத்தினன். திடீரென அதனுள் ஓர் கள்ள அறை காணப்பட்டது. அத

னுள்ளே கையை விட்டான்; ஒன்று மகப்படவில்லை. பின் இரும்புப் பெட்டியை தான் கொண்டுவந்த ஆயுதத்தால் சத்தப் படாது உடைத்துப் பார்த்தான். அது நிறைய பவுன்களே நிரம்பி யிருந்தன. இவற்றை லட்சியமாக பார்த்துவிட்டு

மற்றோரிடத்தில் இருந்த ஓர் ஆணியை அழுத்தினான். உடனே காலிந்து அறைகளுள்ள ஓர் சுரங்கம் காணப்பட்டது. அதனுள்ளும் அவன் நாடிய வஸ்து அகப்படவில்லை. வீரப்பன் திகைத்தான்.

“ஐயா வீரப்பரே, இன்னும் உமது சாமர்த்தியத்தைப் பார்ப்போம்” என்று மோஹன்தாஸ் நகைத்தான்.

வீரப்பன் சுவற்றையும் தரையையும் வெகுநேரம் கவனித்தான். தன் பூதக் கண்ணாடியை எடுத்து வெகுநேரம், சுவற்றோடு ஒட்டியிருந்த லக்ஷ்மி படத்தைப் பரிசோதித்தான். அவன் முகம் மலர்ந்தது. பின் அந்த பூதக் கண்ணாடியினுதவியால் சுவரும் தரையும் சந்திக்கும் இடங்



கள்ில் நன்கு பரிசோதித்துவிட்டு ஒரு மூலையில் தன் கத்தியை எடுத்து அழுத்தினான். உடனே லக்ஷ்மீ படம் இரண்டாகப் பிளவுண்டது. அங்கு பிரை போன்ற ஒரு துவாரமிருந்தது கண்டு இதை ஆவலுடன் நோக்கினான்; உடனே முகம் தொங்கிப் போயிற்று. அங்கும் அவன் நாடிய பொருள் இல்லை! திடீரென மேஜைமீது இருந்த கைத்துப்பாக்கியின் மீது பாய்ந்து, அதை அவ் வாலிபன் மண்டைக்கு நேராகப் பிடித்துக்கொண்டு, “எங்கே அவை இருக்கின்றன? சீக்கிரம் சொல்லும்; இல்லாவிட்டால் உமது மூளை சிதறி விடும்” என்று கோபத்துடனும் ஆத்திரத்துடனும் கூறினான். மோஹன் தாஸ் இடி இடி யென்று சிரித்தான். துப்பாக்கியில் குண்டுமில்லை; மருந்துமில்லை!

“நான் சும்மா இருக்கும்போது நீர் தானே என்னைக் கொலை செய்யவந்தீர்? இப்பொழுதே உம்மைக் காட்டிக் கொடுத்து விடுவேன்; உம்....உம்” என்று உறுமினான் அவ்வாலிபன்.

வீரப்பனது வீரம் எங்கே? தன்னை மன்னிக்குமாறும் தன் மீதுதான் தப்பென்றும் கூறி வேண்டினான். மோஹன் தாஸ் சிரித்தான். “உம்; உமது ஆராய்ச்சியை முடியும்; சீக்கிரம்” என்றான்.

வீரப்பன் மறுபடியும் அந்தப் பிரையை நடுவில் இடித்தான். அதனுள்ளே விரல் விடக்கூடிய துவாரம் ஒன்று தோன்றியது. இதனுள்ளிருந்து மூன்று வைரங்களும் ஒன்றன் பின்னொன்றாக வெளிப்பட்டன.

“சபாஷ், சபாஷ்! உமது சாமர்த்தியம்” என்று கைதட்டினான் மோஹன்தாஸ். வீரப்பன் வைரங்களுடன் வந்தவழியே செல்ல யத்தனித்தான். “ஒரு நிமிஷம்! உமது சாமர்த்தியத்தைச்சோதிப்பதற் கல்லது நீர் அவற்றைக் கொண்டு செல்ல இவ்வாறு நான் செய்யவில்லை. கீழே வையும்” என்று பயமுறுத்தினான் அவ்வாலிபன். வீரப்பனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவற்றை மேஜைமீது வைத்துவிட்டு வந்த வழியே செல்லலானான். மோஹன்தாஸ் தன்னைக் காட்டிக் கொடுத்து விடுவானோ வென்றும் தன் காலடிகளைக் கொண்டு, தன்னைப்

போலீஸார் பிடித்துக் கொள்வார்களோ வென்றும் அஞ்சினான். ஆனால் தான் தனக்கு மிஞ்சிய பெரியசெருப்பு போட்டுக்கொண்டு இருப்பதை நினைத்து தேறினான். அந்த மாளிகையைத் தாண்டியவுடனே 'ஜாக்' குரைத்தது. பின் நின்றது. இதைக்கேட்டு வியப்படைந்தான் வீரப்பன். தன்னை அதற்கு நன்கு அடையாளந் தெரியும்; பின் அது என் குரைத்து மறுபடியும் நின்றுவிட்டது?

வெகு தூரத்தில் ஓர் உருவம் ஒரு விளக்குடன் வருவதைக் கண்டு, வீரப்பன் அருகிலிருந்த மரத்தின் மீதேறி இலைகளின் மறைவில் ஒளிந்து கொண்டான். வந்து கொண்டிருந்த அவ்வுருவம், 'சட்'டென்று நின்று 'பூ.........' என்று போலீஸ் பிகிலால் ஊதிற்று. உடனே நாலைந்து போலீஸ் வீரர்கள் ஓர் மனிதனைச் சூழ்ந்து விலங்கிட்டுச் சென்றனர்.

நல்ல தூக்கத்தி லிருந்த இன்ஸ்பெக்டர், ஜெகந்நாத தாஸ் வீட்டில் முன்னிரவு மூன்று வைரங்கள் களவாடப் பட்டனவென்று மறுநாட் காலையில் எழுப்பப் பட்டார். மிகுந்த ஆத்திரத்துடன் 'ஸ்ரீனிவாஸ—'க்குச் சென்று அங்கு காணப்

பட்ட காலடிகளைத் தம் கையிற் கள்வன் சிக்கி விட்டானென்று குதூகலத்துடன் தொடர்ந்து சென்றார். ஆனால் காலடிகள் முடிந்த விடத்தில் ஒரு ஜோடி பெரிய செருப்புகள் இருக்கக் கண்டு திகைத்தார். அதே சமயம் சில போலீஸ் வீரர்கள் தாம் முந்தின இரவு ஒருவனைக் கைது செய்ததாகக் கூறிக் கொண்டு வந்தனர். அம் மனித னிடத்தில் ஒன்றும் இல்லை. இன்ஸ்பெக்டர் அரைமணி நேரம் யோசித்தார்; முடிவில் இவர் முகத்தில் ஒருவித பிரகாசம் உண்டாயிற்று. அப்போது இவரைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் யாராவது 'டார்ச்' லைட் அடிக்கிறார்களோ இவர் முகத்தில் என்ற ஐயுற்றுப் பின் திரும்பினார்கள். ஆனால் ஒருவரும் இல்லையென்பதை கண்டு இவர் ஏதோ கண்டு பிடித்திருக்கிறார் என்று நினைத்தனர். மறு விநாடி பீதியும் இரக்கமும் இவர் முகத்தில் வாசம் செய்தன. உடனே எழுந்து கைதிக்கு உடம்பு சரியில்லையென்று அவனை ஆமணக்கெண்ணெய் குடிக்கச் செய்தார். யாவரும் இன்ஸ்பெக்டர் 'புட்டி' போட்டுவிட்டு மூளை கலங்கி இப்படிச் செய்கிறாரோ என்று திகைத்தனர். ஆனால், கைதியின் இரத்தம் மிகுந்த வயிற்றுப் போக்கில் மூன்று வைரங்களும் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன.

இந்த பிரகஸ்பதி யார்? முந்தின இரவு வீரப்பனிடத்தில் தன்னை மோஹன் தாஸ் என்று கூறிக் கொண்டவரே அவர்! வைரத்தை விழுங்குவதால் உண்டாகும் ஆபத்தை யறிந்திருந்தும், சோதனை போடும்போது வேறு வழி இல்லாததால் இச் செயல் புரிந்தார். இயமதர்ம ராஜனுக்கு இவரைத் தம்மிட மிருத்திக்கொள்ளலாமா அல்லது இந்திராதி தேவர்களிடம் ஒப்புவிக்கலாமா என்ற சந்தேகம் பிறந்தது. அவருக்கு விடை யெழுதத் தெரிந்தவர்கள் முடிந்தவர்கள் விடை யெழுதி 'இறந்த கடித ஆபீசுக்'கு (Dead letter office !) அனுப்பினால் தேவலை.

"இன்னும் ஒரு காதந்தான்"

("மைவண்ணன்")

ஸ்ரீரங்கம் பத்மநாபன் காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் உற்சவத்தை முன்னிட்டு, அவனது அம்மான் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் தங்கியிருந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டில் சீதாலட்சுமி என்னும் பெயருடைய அழகிய பெண்மணி இருந்துவந்தாள். ஐந்தாம் திருவிழாவன்று இரவு இரு வீட்டாரும் பெருமாள் சிறிய திருவடி (ஆஞ்சநேயர்) மீது ஆரோகணித்து வருவதைத் தரிசிக்கவேண்டி வெளி வாயிலில் வந்து நின்றனர். அச்சமயம் பத்மநாபன் பார்வை தற்செயலாகச் சீதாலட்சுமி மீது விழுந்தது. சீதாலட்சுமியும் பத்மநாபனைக் கடைக்கண்ணால் நோக்கினாள். இருவர் கண்களுஞ் சந்தித்து உறவுகொண்டாடின. அப்புறங் கேட்பானேன்! இருவரும் ஒருவர்மீதொருவர் காதல்கொண்டு விட்டனர் எனக் கூறுவது அநாவசியம். இரு வீட்டாரும் ஒரே வகுப்பாராதலாலும், அடுத்தடுத்து வசித்து வந்ததாலும் அவர்களுக்குள் நெருங்கிய சிநேகம் இருந்து வந்தது. இவ்விளங் காதலர்கள் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசுவதற்கு இது உதவியாயிருந்து வந்ததில் ஆச்சரியமில்லை. நாலைந்து நாட்களில் இவர்கள் ஒருவர் மனநிலையை மற்றொருவர் அறிந்து கொண்டனர். திருவிழா முடிந்ததும் ஊருக்குத் திரும்பிவிட வேண்டுமென்று அவசரப்பட்டுக் கொண்டிருந்த பத்மநாபன் தன் பிரயாணத்தை மேலும் பத்துநாட்களுக்குத் தள்ளிவைத்தான் என்றால் வாசகர்கள் சிரிக்கக்கூடாது.

இச் சமயத்தில் சீதாலட்சுமியை மகட்பேச அவளது உறவினரில் யாரோ சிலர் வந்தனர். இருதிறத்தாருங் கலந்து பேசியதில், திருப்திகரமான முடிவு ஏற்பட்டது. சீதாலட்சுமியின் தந்தையார் திருமணத்துக்கு நாள் வைத்துக் கொள்ளும்படி பிள்ளை வீட்டாருக்கு உத்தரவு கொடுத்துவிட்டார். திடீரென ஏற்பட்ட இம்முடிவை, சீதாலட்சுமி வாயிலாக அறிந்த பத்மநாபன் திடுக்கிட்டான். அப்போதுதான் அவனுக்குத் தன் குடும்பத்துக்கும் சீதாலட்சுமியின் குடும்பத்துக்குமுள்ள தாரதம்மியம் புலப்பட்டது. சீதாலட்சுமி செல்வந்தர் மகள். பத்மநாபன் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவன். சீதாலட்சுமிக்கு இப்போது முடிவு செய்திருக்கும் வரனோ லட்சாதிபதி. இந்நிலைமையில், சீதாலட்சுமி பத்மநாபனுக்குக் கிடைக்கக் கூடியவளா? தன் அம்மானோ மற்றவர்களோ என்னதான் முயற்சி செய்வதாயிருந்தாலும், சீதாலட்சுமியின் பெற்றோர், பெரிய இடத்துச் சம்பந்தத்தை உதறித் தள்ளிவிட்டு, தனக்கு அவளைக் கொடுக்க முன் வருவார்களென்று நினைக்க முடியுமா! இதையெல்லாம் பத்மநாபன் யோசித்துப் பார்த்தான். அவன் கண்களில் நீர் ததும்பியது. சீதாலட்சுமியும் ஆறாத்துயரங் கொண்டாள். இவர்களிடையே ஏற்பட்டிருக்குங் காதல் சாமானியமானதன்று. ஆதலால், கடைசியாக, சீதாலட்சுமி பத்மநாபனோடு யாருக்குந் தெரியாது வீட்டை விட்டு வெளியேறுவதென்று தீர்மானித்தனர். அத்தீர்மானத்தின்

படியே, அவர்கள் ஒருநாளிரவு ஒருவருக்கும் தெரியாது வெளியேறி ஸ்ரீரங்கத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டனர்.

இளங் காதலர்கள் காதல் வேகம் உந்தித் தள்ள காடும் மலையும் நாடும் நகருமாகப் பல ஊர்களைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். (இக்காலத்தைப்போல் ரயில், பஸ் முதலிய வண்டிகள் அந்தக் காலத்தில் கிடையாது என்பதை வாசகர்கள் அறியவேண்டும்.) சீதாலட்சுமி ஆர்வமிகுதியால் காதலனோடு நடந்தாளாயினும், வியர்வையரும்பி வழிய இடை துவள கால்கள் தள்ளாட அடிக்கடி களைப்புற்றுள். இதற்கு முன் இதுபோல் நடந்தறியாத அவள் இப்போது நெடுந்தூரம் இரவும் பகலுமாக நடப்பதென்றால் எவ்வளவு கஷ்டமாயிருக்கும்? அத்துடன், காட்டு வழியாகச் செல்லும்போது, புலி, சிறுத்தை, கரடி முதலிய துஷ்ட மிருகங்களின் உறுமல்களைக் கேட்டு அச்சங் கொண்டு உடல் நடுங்கினுள்.

"ஆ" வென வாய்விட்டு அலறிய வண்ணம் தன் காதலனைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள் சீதாலட்சுமி. என்ன இருந்தாலும் மெல்லியலன்ளே!

பத்மநாபன் புன்னகை செய்து, "கண்ணே! அஞ்சாதே! உன்னுடன் நானிருக்கும்போது உனக்கென்ன பயம்! தைரியமாய் வா!" என்று கூறி மெல்ல நடத்திச் சென்றுன். சீதாலட்சுமி உலகமறியாப் பெண்ணுகையால், சிறிது தூரம் நடந்ததும், "காதலா! ஸ்ரீரங்கத்துக்கு இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது? பொழுது சாய்வதற்குள் போய்ச் சேர்ந்து விடுவோமா!" என்று கேட்பாள்.

பத்மநாபன் புன்சிரிப்போடு "சீதா கண்ணே! இன்னுங் கொஞ்ச தூரம்தான் இருக்கிறது. அதோ தெரிகிறது பார் தென்னந்தோப்பு! அதைக் கடந்து விட்டோமானல் அப்புறம் ஸ்ரீரங்கந்தான். இங்கிருந்து இரண்டு காதம் இருக்கும். அவ்வளவுதான்" என்று அவளுக்கு மலைப்பேற்படாவாறு பதில் கூறுவான்.

இவ்விதம் மெல்ல மெல்ல நடந்து கடைசியாகத் திரிச்சிராப்பள்ளியை யடைந்து விட்டனர். அங்கிருந்து ஸ்ரீரங்கம் இன்னும் சில காததூரமே இருக்கிறது. ஆனல் திருவானைக் காவலுக்கும் ஸ்ரீரங்கத்துக்கும் இடையே உள்ள வழி மணற்பாங்கான இடமாதலால், சீதாலட்சுமி நடக்க மாட்டாது மிகவும் வருந்தினுள். அவள் பத்மநாபன் தோளின்மீது வலது கையைப்போட்டு சாய்ந்த வண்ணம் சோர்ந்து நடந்தாள். வெயிலோ கடுமையாக காய்கிறது. காலை நிலத்தில் வைக்க முடியவில்லை. சீதாலட்சுமியின் முகத்தில் வியர்வை முத்து முத்தாக வழிந்தது. அவள் பெருமூச்சோடு, "நாதா! இனி என்னல் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது.- உஸ்.—சூரிய வெப்பமோ தாங்க முடியவில்லை.—அப்பாடா!—இச் சுடுமணலில் நடந்து வந்ததனுல் காலெல்லாங் கொப்புளித்துப் போய்விட்டது.—(கழுத்தைப் பிடித்துக்கொண்டு) ஐயோ! நாவறட்சியாய் இருக்கிறதே!........" என்று கூறி யயர்ந்தாள். தன் காதலியின் நிலையைக் கவனித்தான் பத்மநாபன்; மனமுருகினுன். ஆயினும் சீதாலட்சுமிக்கு உற்சாக மூட்டவேண்டி, "கண்மணி, எத்தனையோ காத தூரங்களை யெல்லாங் கடந்து எத்தனையோபெரிய பயங்கரவிபத்துகளிலிருந்தெல்லாம் தப்பித்துக்கொண்டு வந்திருக்கும் நாம் இச்சிறு கஷ்டத்துக்காகப் பயந்து விடலாமா! இவ்விதத் தயங்கி நிற்கலாமா!—காதற்கிளியே! இன்னும் ஒரு காததூரம் நடந்துவிட்டோமானல், இப்பாலைநிலம் தொலைந்து விடும். அப்பால் அரைக்காதந்தான் இருக்கிறது; நாம் ஸ்ரீரங்கத்தை யடைவதற்கு. அதோ தெரிகிறது பார்! அதுதான் என்னை யாட்கொண்டிருக்கும் பெருமானுகிய ஸ்ரீரங்கநாதனது கோயில் கோபுரம்! அதனருகு சந்திர புஷ்கரணி தீர்த்தமும், புன்னை வனமும், காவிரியாறும் இருக்கின்றன. ஆகையால் அங்கு நாம் போனுல், புன்னைமர நிழலில் தங்கி சந்திர புஷ்கரணியில் தீர்த்தமாடி, காவிரியாற்றின் மீது படிந்து வரும் குளிர்ந்த காற்றை யனுபவித்த

வண்ணம் ஸ்ரீரங்கநாதரைச் சேவிக்கலாம்" என்று கூறித் தேற்றினன். சீதாலட்சுமி அப்போதே அவ்வின்பத்தை யநுபவிப்பது போல மகிழ்ந்து மெய்ம்மறந்து காதலன் தோளின்மீது சாய்ந்த வண்ணமே நடந்தாள்.

இக்காதல் சித்திரத்தை நம்மனக்கண்ணெதிரே பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்னும் பெரும்புலவர் பின் வரும் தமது இனிய தீஞ்சொற் பாடலால் தீட்டிக் காட்டுகிறார்:—

"முன்னம் எழ் புரவியார் இரவிகாய்
[வெயிலினல்
மூத்து அரும்பிய கலாமுழுமதித்
[திருமுகத்து
அன்னமே! இன்னம் ஓர் காவதம்
[போதுமேல்
அகலும் இப்பாலே; அப்பால் அரைக்காவதம்
என்னையா ளுடையவன் துயில்அரா
[அமளியும்
இலகு பொற் கோயிலும் இந்துவின்
[பொய்கையும்
புன்னைவாய் நீழலும் புரிசையும் மதுகரம்
பூவிரித்து உறையும் அக்காவிரித்
[துறையுமே'!

ரூ. 2-8-0-க்கு 3-கடிகாரங்களும்

அத்துடன் அழகிய சாமான்களும்

பரிசளிக்கப்படும்,

ஒரே தடவையில் எங்கள் ஒட்டோமோகினி 10 புட்டிகள் ரூ. 2-8-0க்கு வாங்குகிறவர்களுக்கு 1 டிம்பீ கைகெடியாரமும், 1 'B' டைம்பீஸ், 1 சிறிய பாக்கெட் வாட்சும், 14 காரெட் ரோல்டு கோல்டு நிப்பு போட்ட



1 பௌண்டன் பேனாவும், 1300 அடி வெளிச்சம் தரும் டார்ச் லைட்டும், 1 இமிடேஷன் முத்துமாலை ஆகிய இவைகள் பரிசாகக் கொடுக்கப்படும். பாகிங் தபாற் செலவு அணா 14 பிரத்தியேகம்.

Eastern Trading Co.,
Post Box No. 12204, Hatkhola,
CALCUTTA.

தேவகோட்டை

அதிவிரைவில் தயாராகிறது! எதிர்பாருங்கள்!!

உயர்தர நடிப்பு! உன்னத ஜோடிப்புகள்!!

பாரத புத்திரி

அல்லது

அநாதைகள் சேவை.

(சமூக சம்பந்தமான படம்)

முக்கிய நடிக ரத்தினங்கள்.

அமெச்சூர் நடிகர் மிஸ்டர் P. S. கோவிந்தராஜ் மிஸ்டர். ஏ. கே. வரதராஜன் ,, எம். கே. வெங்கடபதி நாயுடு காமெடியன். ஓ. கே. கருப்பையா	புதுவை நடிக ரத்தினம் மிஸ். ராஜேஸ்வரி

செட்டிநாட்டுத் தனவைசிய திலகமாகிய ஓர் இளைஞரும் நடிக்கப்போகிறார்.

தயாரிப்பவர்கள்:—

Super Pictures Syndicate,
N. L. S. Somasundaram,
DEVAKOTTAH.



அதிசய முத்தம்

(வி. ராமமூர்த்தி.)

ராஜசேகரனும் பாலகிருஷ்ணனும் பி. ஏ. வகுப்பு மாணவர்கள். ஒருவரைப் பார்த்தால் ஒருவரைப் பார்க்கவேண்டியதில்லை. அவர்களின் சிநேகப் பான்மையோ சொல்லுந்தரமன்று. பாலகிருஷ்ணன் வெளியூர்வாசி. ஆகையால் அவனுக்கு அவ்வூரில் ராஜசேகரனைத் தவிர அதிக சிநேகிதர்கள் கிடையாது. இருந்தபோதிலும் ராஜசேகரன் பாலகிருஷ்ணனிடம் சிநேகமானது முதல் பகலில் வீட்டிற்குப் போய் சாப்பிட்டு வரும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பாலகிருஷ்ணனுடன் ஹாஸ்டலிலுள்ள ரூமிலேயே இருப்பான்.

இப்படியிருக்க ஒருநாள் மாலையில் இருவரும் வழக்கம்போல் கோயிலுக்குச் சென்றனர். திரும்பி வருகையில் பாலகிருஷ்ணன் தன் எதிரில் ஓர் அழகிய மங்கை சுவாமியைத் தொழுதுகொண்டிருப்பதைக் கண்டு அவளைப் பார்த்தபடியே நின்றான். உடனே ராஜசேகரனும் நின்றான். அப்பொழுது பாலகிருஷ்ணன் அவனை நோக்கி, “ராஜா, அதோ நிற்கும் மங்கையின் அழகை என்னென்று சொல்லுவது, ! அவள் அழகே உருவாயெடுத்து வந்தவளாக இருக்கின்றாளே. எப்படி இருந்தாலும் அவளை.......” என்பதற்குள் ராஜசேகரன் இடைமறித்து மனதில் எதையோ நினைத்து நிச்சயித்தவன் போல, “பாலா! ஏன் வீணான எண்ணங்கள் ? அவள் எப்படி இருந்தால் என்ன ! வா, நாம் போகலாம்” என்றான்.

பாலன்:—“அடே, போடா, நீ எப்பொழுதும் இப்படித்தான் சொல்லுவாய். அதுவுமன்றி, இப்படியே என் வலையில் சிக்கிய எத்தனையோ பெண்களை நான் அடையாதபடி நீதான் செய்தாய். எப்படி இருந்தாலும்........நான்......”

ராஜன்:— (சிரித்துக் கொண்டே) "என்ன; எப்படி இருந்தாலும் நீ அந்த மங்கையை உன் வலையில் சிக்கவைக்கப்போகிறாய் போலும். சீ....சீ...வாடா."

பாலன்:—"டேய், நான் உன்னுடன் வரமாட்டேன். எப்படி இருந்தாலும் நான் அந்த மங்கையை,...என் காதற் கிளியை எப்படியாகிலும் அடைவேன் என்பது திண்ணம். அதோ பாருடா, அவள்....என்னைக் கடைக்கண்ணால்......."

ராஜன்:—"பாலா! வீணான வார்த்தைகள் வேண்டா. அவள் ஒரு சமயம் மணமான பெண்ணாயிருந்தாலோ........"

பாலன்:-"இருந்தாலென்னடா; இருந்தாலும் அவளை....இல்லை. இல்லை என்...காம ரஞ்சிதத்தை ஒரு நாளாவது அடையா விட்டாலும் அவளுக்கு அன்புடன் ஓர் முத்தமாவது கொடுப்பேன்."

ராஜன்:—"சீ, சீ வாடா; எட்டாத பழத்திற்கு வேண்டா கொட்டாவி விடுகின்றனை. நடடா போகலாம்."

பாலன்:—"நீ வேண்டுமானால் போடா, நான்....அம்மங்கையின் அழகிய பவளம்போன்ற வாயில் ஓர் முத்தம் கொடுத்துவிட்டுத்......."

ராஜன்:—(சிறிது கோபத்துடன்) "வருகிறாயா இல்லையா; நேரமாகிவிட்டது வீட்டிற்கு போகவேண்டும்."

பாலன்:—"வேண்டுமானால் நீ போடா. அதை உனக்கு அனுபவிக்க அதிருஷ்டம் இல்லைபோலும்."

இதனைக் கேட்டு ராஜசேகரன் வீட்டிற்குப் போக வாரம்பித்தான். அவன் சொல்லுவதை யறிந்த பாலன், "ராஜா; ராஜா!! வந்துவிட்டேன் நில்லுடா" என்று கூறி அவனிடம் வந்து நடந்துகொண்டே, "ராஜா! என்னடா அந்தப் பெண் மாத்திரம் அவ்வளவு அழகாக இருக்கிறாள். இருந்தாலும்......."

ராஜன்:—"இனிமேல் என்னுடன் பேசாதேடா. நீ எண்ணிய காரியம் கடுகளவும் கைகூடாது."

பாலன்:—"என்னடா சொன்னே! இதோ பார். என்றைக் கிருந்தாலும் சொன்னபடி செய்கிறேன்."

ராஜன்:-"சரிதான் போடா, இதோ ஹாஸ்டல், நீ உன் ரூமிற்குப்போ" என்று கூறித் தன் வீடு செல்ல வாரம்பித்தான்.

பாலகிருஷ்ணனும் தன் சிநேகிதன் செல்லுவதைக் கண்டு சிறிது மனங்கலங்கினான். உடனே அம்மங்கையின் உருவம் அவன் கண்முன் தோன்ற அதை மறந்தான்.

வீடு சென்ற ராஜசேகரன் அன்னம் புசிக்காமல் படுக்கைக்குச் சென்றான். அவன் மனம் படாதபாடு பட்டது. என்னதான் சிநேகனாகவிருந்தாலும் தன் மனைவியாகிய ரஞ்சிதத்தைப் பாலன் அப்படிக் கூறியது அவனுக்கு வருத்தத்தை யளித்தது. இருந்தபோதிலும் பாலன் ஆப்த நண்பன் என் செய்வான்!

ராஜன் தன்னை நீங்கியதும் பாலன் நேராக அம்மங்கை நின்றவிடம் சென்று அவளைக் காணாததால் உடனே நேராகக் கோயிலைவிட்டு வெளியில் வந்தான். வரும்பொழுது தன் எதிரில் தான் முன்கண்ட பெண் செல்லுவதைக் கண்டு அவளறியாமல் அவள் பின் சென்றான். அவள் ஓர் பெரிய வீட்டில் நுழைவதைக் கண்டு சிறிது நின்றான். பின்னர் தைரியங்கொண்டு அப் பெண் வீட்டிலாவது சிறிது படுத்து விட்டுச் செல்லலாம் என்று அவ் வீட்டுத் திண்ணையில்படுத்தான். உடனே மன அயர்ச்சியால் உறங்கிவிட்டான். சிறிது நேரத்திற் கெல்லாம் கண் விழித்தான். வீட்டினுள் ஏதோ பேச்சுச் சத்தம் கேட்பது கண்டு உற்றுக் கேட்டான்.

அதாவது, "சரிதான் போ, நீ என் நான் கோயிலுக்குப் போகவேண்டாமென்றால் போகிறாய். இனிமேல் நீ போக வேண்டியதில்லை. போனால்......" என்பதற்குள், "சரிதான் போங்க; கோயிலுக்குப் போவதற்குக்கூட தடையா! நான் காலையில் இதை அம்மாவிடம் கூறுகிறேன்" என்ற ஒரு பெண் குரல் கேட்டது. மறு

படி முன் குரல், "அடி ரஞ்சிதம், இருக்கட்டும்; இனிமேல் என்னுடன் பேசாதே. நான் வெளியில் போய்ப் படுத்துக்கொள்ளுகிறேன்" என்று கூறுவது பாலன் காதில் விழுந்தது.

இதைக் கேட்டதும் பாலன் மனம் பகீரென்றது. ஏனென்றால் வெளியே வருபவன் ஒரு சமயம் தன்னைப் பார்த்துவிட்டால் என்ன செய்வது என மூச்சுவிடாமல் சுவரோடு சுவராய் ஒட்டிக்கொண்டு படுத்துக்கொண்டான்.

உடனே கதவு திறக்கப்படும் சத்தம் கேட்க ஒருவன் உள்ளிருந்து வெளிவந்து பாலன் படுத்திருக்கும் திண்ணைக்கு எதிர் திண்ணையில் படுத்துக் கொண்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் குறட்டைவிட்டுத் தூங்கலானான்.

அப்பொழுது பாலன் உள்ளே பேசிய பெண் யாரென்று அறிய எண்ணி மெதுவாகச் சன்னலண்டை சென்று கதவை அழுத்திப் பார்த்தான். இவன் அதிருஷ்டம் கதவும் திறந்துகொண்டது. திறந்ததும் உள்ளே பார்த்தான். என்ன ஆச்சரியம்! உள்ளே சிறிதாக எறிந்து கொண்டிருக்கும் விளக்கின் வெளிச்சத்தில் தான் முன் கோயிலில் பார்த்த பெண் ஓர் நாற்காலியில் உட்கார்ந்திருக்கக் கண்டான். உடனே அப்படியே ஸ்தம்பித்துவிட்டான்.

சன்னல் திறந்த சத்தம் கேட்ட அவ்வனிதை ரஞ்சிதம் நேராக சன்னலிடம் வந்து பாலனைத் தன் காதலன் என்றெண்ணி "காதலா! நான் இனிமேல்..." என்பதற்குள் பாலன் இதுதான் தக்க சமயம் என்றெண்ணி, "ரஞ்சிதம், பேசாதே, யாராவது கேட்டுக்கொண்டிருக்கப் போகிறார்கள். இனிமேல் நான் ......உன்னைக் கோபிப்பதில்லை......கண்ணே!" என்று மெதுவாகக் கூறினான்.

ரஞ்:—"அதுதான் சரி நாதா; நீர்.... என் அன்பிற்குரியவரல்லவா" என்று கூறி ஜன்னலின் கம்பிகளுக்கிடையே தன் கையைவிட்டு அவன் முகவாய்க் கட்டையை மெதுவாகத் தடவினாள்.

உடனே பாலனும் ஏதுமறியானாய் தேனைக் குடித்த வண்டைப்போல் மயக்கம்கொண்டு தானும் அவள் தாடையினை

மெதுவாகத் தடவினான். இதனால் ரஞ்சிதம் காம உணர்ச்சி பற்றி எரிய புளகாங்கிதமுற்று, "நாதா; வாருங்கள் உள்ளே" என்று அவன் வாயில் தன் வாய் படும்படி பேசினாள். இதுதான் சமயமென்றறிந்த பாலனும் சன்னல் கம்பிகளுக்கிடையே உள்ள ரஞ்சிதத்தின் வாயில் தன் வாயை வைத்து அழுத்தி ஓர் முத்தமீந்தான். உடனே எதையோ மனதில் நிச்சயித்தவனாய் உள்ளே செல்லவெண்ணங் கொண்டு பாலன் கதவண்டை சென்று அதை அழுத்தித் திறந்தான். கதவும் "கிரீச்" என்ற சத்தத்துடன் திறந்தது.

இச்சத்தம் கேட்டு வெளியே படுத்திருந்த ராஜசேகரன் திடுக்கிட்டெழுந்

தான். உடனே உள்ளே செல்ல ஓடினன். ஆள் வரும் சத்தம் கேட்ட பாலன் சட்டென்று கதவின் பின்னல் பதுங்கிக் கொண்டான். ராஜசேகான் உள்ளே சென்றதும் பாலன் வெளிவந்து ஒரே யோட்டமாக ஓடித் தன் ரூமில் படுத்துக் கொண்டான்.

உள்ளே சென்ற ராஜசேகான் தன் ரூமிற்குள் சென்று தன்மனைவியை சிறிதும் கவனிக்காமல் டார்ச்சு லைட்டையும் தடியையும் எடுத்தான். இதைக் கண்ட ரஞ்சிதம், "நாதா, தடியும் லைட்டும் ஏன்," என்றான்.

ராஜன்:—"நான் நன்ருகத் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது, கதவு திறக்கும் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டேன். விடு, சிக்கிரம் வந்தவன் ஓடிவிடப் போகிருன்."

ரஞ்சிதம்:—"நாதா! ஏன் தூங்கினேன் என்று பொய் கூறுகிறீர்கள். இப்பொழுதுதானே என்னுடன் பேசிவிட்டு "இதோ உள்ளே வருகிறேன்" என்று கூறினீர். அதுவுமன்றி........"

இதனைக் கேட்டதும் ராஜசேகானுக்கு இடிவிழுந்ததுபோ லிருந்தது. உடனே அவன் ரஞ்சிதத்தை இடைமறித்து, "என்னடி உளறுகிருய்," என்ருன்.

ரஞ்சிதம்:—"நானு உளறுகிறேன். சிறிது நோத்திற்கு முன் என்னுடன் பேசியது மன்றி ஓர் முத்தமும் கொடுத்தீரே; அதையும் மறந்துவிட்டீரா! அல்லது வேணுமென்றே என்னைச் சோதிக்கின்றீரா" என்ருள்.

இவள் இப்படிக் கூறவே ராஜசேகரன் அவள் கனவு கண்டிருக்கிருள் என்று நிச்சயித்தவனுய் அவளைப் பார்த்து, "ரஞ்சிதம்! இப்படிகூடவா கனவு காண்பது! பேஷ், சரி, உன்னுடன் இப்பொழுது பேசிக்கொண்டிருந்தால் வந்தவன் ஓடிவிடுவான்" என்று கூறி வீட்டின் எல்லா பக்கங்களிலும் தேடியலைந்து எங்கும் திருடனைக் காணுதவனுய்ப் படுத்துத் தூங்கிவிட்டான்.

மறுநாள், காலையில் வழக்கம்போல் ராஜசேகான் தன் காலேஜிற்குச் சென்ருன். இவன் வருகைக்காகக் காத்திருந்த பாலன் ஓடோடியும் வந்து, "ராஜா! நான் என் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன். அவளை....இல்லை, என் காதற்கிளிக்கு ஓர் முத்தத்தை அன்புடன் கொடுத்துவிட்டேன்" என்று ஆதியோடந்தமாக நடந்தவைகளை வெகு சந்தோஷத்துடன் கூறினன்.

இதனைக் கேட்டதும் ராஜசேகானுக்கு எப்படி இருக்கும் என்று நீங்களே யோசித்துப் பாருங்கள்.

"அதிர்ஷ்டம்" ரொக்கப் பரிசு ரூ. 1000

முதற் பிரைஸ் ரூ. 500, 2-வது பிரைஸ் ரூ. 200. 3-வது பிரைஸ் ரூ. 100.

முதல் முதலில் வரும் சரியான விடைக்கு ஸ்பெஷல் பிரைஸ் ரூ. 200.

விடை 1-க்கு அணு நான்கு. ஒருவர் எத்தனை விடைகளேனும் அனுப்பலாம்.

"கூட்டல் போட்டி"

6
—
3
—
—
—
மொத்தம் 30

ஒவ்வொரு விடைக்கும் கட்டணம் அணு 4. கொடுத்திருக்கும் கட்டலைக் கூட்டினல் மொத்தம் 30 வரவேண்டும். கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்து 20-9-36க்குள் விடைகள் அனுப்பவேண்டும். மானேஜர் தீர்ப்பே முடிவானது. பதில் விரும்புவோர் M. O. ரசீதுடன் 1 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

ஜெ. டாஸன் பிள்ளை, மானேஜர், ஏனதி, முதுகுளத்தூர் போஸ்டு. ராமநாதபுரம் ஜில்லா.



வறுமைக் கொடுமை

(அனந்தன்.)

டிக்டக் என்று தரி செய்யும் சப்தம் ஜன சந்தடியற்ற மத்தியான வேளையில் சிறு குடிசையொன்றின் பக்கலினின்று வந்து கொண்டிருந்தது. தரிக்கு எதிரே உட்கார்ந்து கொண்டிருந்த கண்ணுசாமிக்கு அதில் மனது செல்லாமல் கைமட்டும் வேலை செய்து கொண்டிருந்தது. அவனுக்குப் பக்கத்தில் தரையில் ஒரு பெண் உருவம் புறண்டு கொண்டும் திணறிக்கொண்டும் படுத்திருந்தது. அவள் அருகே இரு சிறுவர்கள் நின்று தங்கள் தாயை நோக்கியவாறு கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தனர். இறுதியில் ஒரு கிழவர், கிழிந்த பாயில் கிடத்தப் பட்டிருந்த அவர் மனைவியைத் தேற்றிக் கொண்டிருந்தார்.

“ஐயோ! பசிக்கிறதே அம்மா” என்று கதறினர் சிறுவர். பாவம்! அவர்களுக்கு வீட்டில் இருப்பதும் இல்லாததும் எப்படித் தெரியும்.

“உம்....எழுந்திருக்க முடியவில்லையே....இடுப்பை வலிக்கின்றதே....ங்...நாதா —” என்று வலியைப் பொருட் படுத்தாது திரும்பி குழந்தைகளைக் கட்டிக்கொண்டு முகத்தை அவர்கள் முகத்தோடு பதித்து அலறினாள் தாய். கண்ணுவின் தொண்டை அடைத்துக் கொண்டது. துக்கம் என்னும் சொல்லுக்கு அர்த்தம் மட்டிலும் தெரிந்தால் அதை உணர்ந்தால் கஷ்டப் படுவான். ஆனால் அது அத்து மீறிச் சென்றால் வருந்தி என்ன பயன்! கண்ணு தரியைவிட்டு எழுந்திருக்கவில்லை. ஆத்ம சக்தி குறைந்து, உலகின்பதுன்பம் நீங்கி, பரம்பொருளை தியானிக்கிறான். கண்கள் மங்கின பார்வையுடன் ஆசை மனைவி பக்கம் திரும்புகிறது. ஒரு சொட்டு கண்ணீர் தன்னையு மறியாது வரண்ட தோல் சுருங்கிய தாடைகளில் விழுகின்றது.

“கண்ணுவை கொஞ்சம் சுடு ஜலமாவது கொடுக்கச் சொல்லுங்கள்” என்று கிழவி கிழவரை நோக்கிக் கேட்கின்றாள். கிழவர், தள்ளாதவர், நெஞ்சை யடைக்க ஈனஸ்வரத்தில் கண்ணுவை விளிக்கின்றார். வீட்டில் கூழுக்கும் ஒருபிடி நொய் அரிசி கிடையாது. அது அவனுக்குத் தெரியும். அக்குடியில் இருப்போர் யாருக்கும் தெரியும். பார்ப்பவர் யாவருக்கும் தெரியும். அந்தப் பாழும் கடவுளுக்கும் தெரியும். ஆளும் அரசனும் அறிவார்.

“தாயே உங்கள் அந்திய காலத்தில் கூழ் ஊற்றக்கூட சக்தியில்லாத பாவி நான் ஏன் பிறக்கவேண்டும்...சரி இதோ ஜலம் சுட வைக்கிறேன்.” என்று சொல்லி கிழவர்பக்கம் திரும்புகிறான். அவர் தேகத்தில் தசை இருக்குமிடம் இல்லை, குச்சி போல் உட்கார்ந்திருந்தார். தாயின் பக்கம் நோக்கு செல்லுகின்றது. மனைவி இப்பக்கம் முகத்தைத் திருப்புகிறாள். மங்கிய ஒளி பிரகாசிக்கின்றது. கண்ணீர்தான் கேட்காமலே, சொல்லாமலே வரக் கூடியது; அதற்கு யாசிக்க வேண்டியதில்லை என்பதைத் தவிர வேறென்ன அங்கு நாம் காண முடியும்.

அதோ குழவிகள் அவனிடம் பரிவுடன் வருகின்றன. “தாகம்” என்றுகூட அவர்களால் சொல்ல முடியவில்லை. உதடுகளே அசைகின்றன. அவர்களுக்கு ஆகாரத்திற்குப் பதிலாக கிணற்று ஜலத்தைக்

கொடுக்க இயலுவதை நோக்க, "ஈசா! இப்படியும் சோதிக்கலாமா" என்று மேல் வானத்தை எறிட்டுப்பார்த்து சோர்கிறுன்.

கிணற்றுள் பானையைக் கட்டி விட்டான். பாவம்! சாப்பிட்டு மூன்று நாட்கள் ஆகின்றது. மேல் மூச்சுவாங்க உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மொள்ளுகிறுன்.

தாய் சுடுஜலம் உட்கொண்டாள். கிழவன் பசி தாங்காமல் சோர்ந்து படுத்தார். "நாதா...குழந்தைகளுக்காவது ஒரு கவளம் வேண்டுமே" என்ற குறிப்புடன் அவனைப் பார்த்தாள் மனைவி. மறுகணம் ஒரு மூட்டையுடன் வெளிக் கிளம்பினுன். வாசல் பக்கம் தடுக்கியது. மனமும் தழுதழுத்தது. ஆயாசத்துடன் உள் திரும்பினுன். ஒருமுறை எல்லாவற்றையும் கண்காணித்தான். ஆத்மா துடித்தது. உயிருக்குயிரான இவர்களை மறுபடியும் பார்க்கப் போகின்றேமா என்கிற தழுதழுப்பும் மனநிம்மதியற்ற தன்மையும் போலும். சில சமயங்களில் இப்படிப்பட்ட உணர்ச்சி ஏற்படுவதுண்மை.

மனித சிருஷ்டிக்கு எப்போதும் அந்த அஞ்ஞானமும் பாசமும் விடுவதில்லையல்லவா. கண்ணு முதிர்ந்த ஞானியல்லவே!

2

"ஐயோ! அம்மா" என்று கூவின பிள்ளைகள். தாய் வாய் திறக்கவில்லை. மூர்ச்சையாகி விட்டாள். "தாதா" என்று கத்திக்கொண்டு அங்கு சென்றன. தாதா கண் விழித்தார். அவர் கண்கள் பஞ்சடைந்து விட்டன. மெதுவாகச் சுற்றுமுற்றும் பார்த்தார்.

"பாட்டி ஏன் பேசவில்லை" என்று கேட்டு அவளை அசைத்துப் பார்த்தனர். பாட்டி வியனுலகடைந்ததை . அவர்கள் எப்படி உணர்வர். கிழவர் கொஞ்சம் சுடு ஜலம் அருந்தி தடியூன்றி எழுந்தார். மனைவி விஷயம் அறிந்தார். ஆனல் அதிகநாம் அதைப்பற்றி ஆலோசிக்க இடமில்லை. மருமகள் அலறுகிறுள். மூர்ச்சையிலேயே பயங்கரக் கத்தல். முகத்தில் ஜலத்தைத் தெளித்தார். தாய் கண்விழிக்க பசங்கள் அவளண்டை ஓடின. தாயின் ஆதரவணைப்பில், அன்பு முத்தத்தில், ஆசை வார்த்தைகள் கண்ணீரில் என ஆகிவிட்டது.

"அம்மா பசி...கொஞ்சம் தண்ணீராவது கொடு"

தாய் எழுந்திருக்க முயன்ருள். பாவம் பூர்ண கர்ப்பிணி. அத்துடன் பசியின் கொடுமை. எப்படி எழுந்திருக்க முடியும். உட்காரக்கூட முடியவில்லை. பிள்ளைகள் அவள் ஸ்திதியை உணர்ந்து இனித் தன் தாயை உபத்திரவிக்கக்கூடாது என்று தம் பசி கவலை தாகம் எல்லாவற்றையும் மறந்து அவள் மடியில் அமர்ந்தன.

ஐந்து நிமிடத்திற்குள் சாண்வயிறு படாத பாடு படுத்த பையன்கள் மெதுவாக எழுந்து தோட்டத்திற்கு ஓடினர். அங்கு பானையில் மீதி ஜலம் கிணற்ற மேடையில் அப்படியே யிருந்தது. ஆவலுடன் மூத்தவன் அதைப் பிடித்து கையை அதனுள் விட்டு ஒருகை அள்ளினுன். அதற்குள் ஒரு பறவை சிறகடித்துக்கொண்டு தாக வாட்சி தாளாமல் பானைக்குமேல் வந்து விழுந்தது. பையன் திடுக்கிட்டு விட்டான். பானை கிணற்றுள் சாய்ந்தது. அதைப் பிடித்திருந்த பையன் பானையைப் பின்பற்றினுன். பசிப்பிணி, தாகவேட்கை, இவைகளுடன் கிணற்றுள் ஆழ்ந்து பதம் சேர்கிறுன்.

"அண்ணு, நீ மட்டும் எவ்வளவு ஜலம் குடித்துக் கொண்டிருக்கிறுய். எனக்குக் கொஞ்சம் கொண்டுவா" என்று கேட்டவண்ணம் நின்றுவிட்டான் இளையவன். அவனுக்கு எப்படி உண்மை தெரியும். ஆம். அண்ணன் அதிகம் குடித்தாவில்லை. மூன்றுடன் தணிந்தது அவன் தாகம்.

3

கண்ணு தெருவு தெருவாக வெய்யலில் அலைந்தான். இவைகள் அவனுக்கு லக்ஷியம இல்லை. ஒரு கவளம் அன்னம் வேண்டும். ஆனல் தன் புடவைகளை வாங்

குபவர்கள் யார் இருக்கிறார்கள்? ஒரு தெருவில் பலபெண்கள் ஒன்றுகூடி கொம்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். அவர்களை அணுகி "அம்மா புடவை வதுண்டு பாவாடே......" பணிவாகக் கேட்டான். அவர்கள் உடனே தெருவில் திண்ணையில் உட்காரவைத்து பரீக்ஷித்தனர்.

இதற்குள் டிப்பனுக்கு காப்பிபொடிகடன் வாங்க அம்புஜம் என்ற மாது வந்தாள். ஸ்நேகிதிகள் புடவை வியாபாரத்தில் இருப்பதைக்கண்டு, முகத்தை ஒரு சுளுக்கு சுளுக்கி, "ஏண்டி ராஜம் இந்தக் காலத்திலே யார் வாங்கரா? பாண்டியிலே 5 ரூபாய்க்கு ஒரு அருமையான நைஸ் சில்க். எவ்வளவு அழகா பிரகாசிக்கின்றது தெரியுமா?"

"ஆமாண்டி அம்புஜம். போன வாரம் என் பொண்ணுக்கு ஒரு சில்க் கவுன் ஒண்ணரை ரூபாய்க்கு முடிச்சுட்டேன்" என்றாள் பங்கஜம்.

"எனம்மா, நீங்கள் எல்லாம் இப்படி சில்க், மற்ற அன்னிய சாமான்கள் வாங்கினால் எங்க வயிறை எப்படி வளர்க்கிறது" என்று தன்னையுமறியாது ஒரு கேள்வி போட்டான் கண்ணு.

அந்தக் கேள்விக்கு பதிலிறுக்க வாய் ஏன் எழுகின்றது! அதில் கொஞ்சம் வம்புக்காரி, "ஏனப்பா இப்படி கோபித்துக் கொள்ளரே. ஆனால் அதிகப்பிரசங்கி"

இரண்டுமணி நேரம் ரகங்களைப் பார்த்து "சைசாக இருந்தா நாளைக்கு கொண்டுவா பார்ப்போம்" என்று சொல்லி அவரவர் காப்பி சாப்பிட எழுந்தனர். கண்ணு என்ன செய்வது, என்னாவது? ஒரு இரக்கமுள்ள ஸ்திரீயுடன் கெஞ்சிக் கூத்தாடி கொஞ்சம் பழைய அமுது வாங்கிக் கொண்டு மூட்டையுடன் குடிசையை நோக்கிப் புறப்பட்டான். பெண் பேயிலும் பெண் கருணை தனியாக உண்டு. இரக்கம் அவர்களின் சுபாவம்.

4

"ஐயோ! வலிக்கின்றதே....இடுப்பு ...ஆ!" என்று புரண்டுக் கதறினாள் கர்ப்பிணி. கிழவர் மட்டுமே இருந்தார். அவரால் என்ன செய்யமுடியும். "மகளே கடவுளை தியானி. கவலைப்படாதே. அவன் காப்பான்.........இரு; நான் போய் ஏதாவது ஒரு பெண்பிள்ளையை அழைத்து வருகிறேன்." என்றுகூறி கம்புடன் கிளம்பினார்.

தெருவில் அசாத்திய வெயில். தரையின் சூடு உச்சிமயிரை வேக வைக்கும். புழுவைப்போல துவண்டு நடந்தார் கிழவர்.

ஒரு கல்யாணவீட்டின்வாயிலில் பிச்சைக்காரர் நின்று கத்திக் கொண்டிருந்தனர். கிழவர் இதைக் கண்டதும் சுய எண்ணத்தை மறந்தார். பசி அரக்கன் முன்வந்ததினால், மானிடனுக்கு இயற்கையாயுள்ள சுயநலம் மூண்டது. அப் பிச்சைக்காரர்களுடன் கலந்து ஏதாவது வாங்கி உண்டு மிகுந்ததை எடுத்துச் செல்லலாம் என்கிற எண்ணம்.

வீட்டுக்காரர், சாப்பிட்டு வயிறுமுன் வந்திருப்பவர்களுக்கு லட்டு முதலியவைகளை வேண்டிவேண்டி உபசரிக்கின்றனரேயன்றி, ஏழைப் பிச்சைக்காரர்களை கவனிப்பவர் யார்? "அடேய், ஒரு சொம்பு ஜலத்தை அவர்கள் தலையில்கொட்டு; தடிப்பயல்கள்" என்கிற ஆர்டர் பறந்தது.

"தொப்" என்று எச்சிலிலைகள் வந்து விழுந்தன. எல்லோரும் அதை எடுக்க ஓடினர். கிழவர் மெதுவாக ஒரு மூலைக்குச் சென்றார். அங்கு இரண்டு மூன்று இலைகள் போடப்பட்டன. அதைத் தின்ன அதிவேகமாக ஒரு நாய் ஓடிவந்து வாய் வைத்தது. அதனுடன் பங்குக்குவா ஒரு குறவன் சிறுகல்லை எடுத்து அதை அடித்தான். அதற்குள் கிழவர் அவ்விடம் வந்தார். கல் குறி தவறியது. கிழவர் பொட்டில் பட்டது. ஈனஸ்வரத்துடன் சிறு ஆத்மா பயங்கரக் குரல் கிளம்பி மேனோக்கிச் சென்றது. கிழவர் பிணமாக மண்ணில் சேர்ந்தார். தேகம் மண்ணாலாகியது அது மண்ணுடன் மக்கட்டும்.

5

"போன மாமனையும் காணவில்லையே! ......என்னரும் குழந்தைகளே உங்களைக் கடைசிமுறை காணவேண்டியழைக்கவும்

என் வர மறுக்கிறீர்கள்....நாதா! குழந்தைகள் கதி எப்படி.....தங்களைக் கடைசி தடவையே பார்க்க விரும்பும் என் ஆசை பூர்த்தியாகுமா? ...வலிவலி தாளவில்லை ...." என்ற கூக்குரலுடன் மூர்ச்சையானாள் தாய். மறுகணம் "குவாகுவா" என்று கத்தியவண்ணம் இப்பாப பூமியில்-வறுமை இந்தியாவில்-சிசு கண் திறந்தது. அக்குரல் கேட்டதும் தாயின் முகத்தில் களங்கமற்ற பிரகாச ஒளி பிரதிபலித்தது. மெலிந்த புன்னகை எழும்பியது. ஆயாசப் பெருமூச்சு வந்ததெனினும் அதை எடுத்து அணைக்க அவளுக்குத் திடனில்லை....கண்கள் இருண்டன. இப்படி அப்படி தலையை சாய்த்தாள்....... "குழந்தைகளே—நாதா" ஆவி சென்றது.

சில விநாடிகள் சென்றிருக்கும் இவர்கள்தான் பசிப்பிணியால் வாடிக் காய்ந்து சுண்டி வந்தவிடம் போய்ச் சேர்ந்தனரென்றால், அக்குழவியும் பாலுண்ண வகையின்றி கத்தி தொண்டை வரண்டு தேறுதல் சொல்வாரின்றி அரவணைப்பாரின்றி ஆதரிப்பாரின்றி இறக்க வேண்டுமா....... கொலையைவிட மயிர் சிலிர்க்கும் சித்ரவதை.

பாவம்! பெற்றமனம் கண்டிருந்தால் அம்மனம் எங்கே? அது நிம்மதியுடன் ஈசன் நாமங்களை துதிக்க அங்கு சென்றவர்களுக்கு உலகபாசம் ஏது?

6

"கால் கொதிக்கின்றதே அண்ணா ஏன் பேசமாட்டேன் என்கிறாய்.—தாகம் நாக்கைப் பிய்க்கின்றதே. எனக்குங்கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. நீ மட்டும்.... ....உம் அம்மாவிடம் சொல்லுகிறேன்" என்று உள் ஓடிவந்த சிறுவன் "அம்மா" என்று கத்திக்கொண்டே தாயினண்டை வந்தான் இவன் கால்கள் கொதித்து வெந்திருந்தன. பசி...தாகம் இவைகளை சிறுவன் பொருட்படுத்தாது இருக்க முடியுமா?

"அம்மா......உம் தூங்குகிறாள்........ பாட்டி பேசாம லிருக்கின்றாளே என்மேல் கோபமா....அப்பா எங்கே போய்விட்டார். ....தாதாகூட எங்கேயும் காணப்படவில்லை.......அண்ணன் தாகத்தை தீர்க்கிறார்.......எனக்கு ஒன்றுமில்லையா....... அம்மா" என்று அவளைத் தட்டினான். மரக்கட்டை. அவளுக்கு எப்படித் தெரியும். என்ன கத்தி என்னபயன்! சுவருக்குக்கூட கொஞ்சம் உயிரிருக்கும். பிணம்!

கால்மணிநேரம் குடிசைக்கும் கிணற்றுக்கும் நடந்து கத்தினான். அவனுக்குக் களைப்பு, பசி, தாகம், நிசப்த பயங்கரம். அச் சிறுவனுக்கு தேறுதல் சொல்ல கடவுளா வரப்போகின்றார்? தருவனா அல்லது மார்க்கண்டேயனா...தவசா செய்திருக்கிறான்....அவருக்குத்தான் சோதனை செய்வதில் திருப்தியாச்சே!

தாயின்மீது சோர்ந்து படுத்தான். அழுகல் பழம் நல்லதையும் அழுகலாக்கிவிட்டது!

7

ஒரே தாண்டலில் உள்வந்தான் கண்ணுசாமி! அங்கிருந்த சாந்தி, நிசப்தம் அவன் உள்ளத்தை ஊடுருவியது. தன் கையிலிருந்த சோற்றை ஒரு இடத்தில் வைத்துவிட்டு தாயினண்டை சென்றான். அசையாத பிரேதத்தைக் கண்டான். பார்வை அடுத்த சீனில் சென்றது. மரணகட்டம். தாய், மகன். பிறந்த சிசு மூவரும் நித்தியானந்த ஜோதியில் தாண்டவ மாடுகின்றனர்.

குடிசைக்கு வெளியில் ஆள் அரவம். அங்கு கண்ட காட்சிஎன்ன? தன் பிதா.... மூத்தமகன் இவர்கள் பவனி!

கண்ணுவுக்கு கவலைக்குறி தோன்றக் காரணமில்லை. சவம் சவம்........ஆறு சவம் உயிர்க்குயிரானவர். ஆனல் அவன் கண்களில் ஒருபொட்டு ஜலம்! எதற்கு மனக்கஷ்டம். வஞ்சம்!! ஆம்!!! இவ் உலகத்தார்.......அல்ல இந்தியரின்மீது வறுமைப் பிணிக்கு ஆளாக்கி கொலை புரியும் இவ் விந்தியர்மீது வஞ்சம்! சினம் கொண்டு பயனென்! மனமே உணர் என்ற அவன் ஆத்மா சொல்லவும் ஆத்மா சிரக்கம்பம் செய்கின்றது.

சக—கமனம்

(ஆரியூர்- வ. பதுமநாப பிள்ளை.)

"பிறவாதிருக்க வரந்தா வேண்டும்"—என்று ஆண்டவனை வேண்டிக்கொண்டார் ஒரு அன்பர். இம் மண்ணுலகிலே, பிறப்பும் இறப்பும் நமது விருப்பம்போல் நேரக்கூடுமானால் எவ்வளவு நன்றாயிருக்கும்! ஒவ்வொரு நாளும்—ஒவ்வொரு நிமிஷமும்—தனது தொழிலைச் சிறிதும் ஓய்வின்றி நடத்திக்கொண்டேயிருக்கும் யமதர்மன், கொஞ்சகாலம் தனது தொழிலை நிறுத்தி வைத்து 'லீவ்' எடுத்துக்கொண்டு 'ஜாலி'யாகக் காலங்கழிக்கத் தீர்மானித்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! வறுமையின் கொடுமையைச் சகிக்கமுடியாமல் 'என்னைக்கொண்டு போ!'—என்று தன்னை நோக்கித் தினந்தோறும் கதறிக் கொண்டிருக்கும் ஏழைகளின் முறையீட்டைக் காலதேவன் கவனிப்பதேயில்லை; அதற்கு நேர்மாறாக "இன்னும் கொஞ்சகாலம் இருந்துவிட்டு வருகிறேன்"—என்று பரிதாபமாகக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும் செல்வர்களை மாத்திரம் சீக்கிரம் கொண்டுபோய் விடுகிறான்! திருக்கடையூர்-சந்திரசேகர முதலியார், சமீபத்தில்தான் தமது சஷ்டியப்த பூர்த்தியை மிகுந்த ஆடம்பரமாகக் கொண்டாடினார். அதைக் கொண்டாடுவதற்காகவே, அவர் ஏற்கெனவே தமது மூன்று மனைவிகளையும் காலனுக்குப் பறிகொடுத்திருந்தும் நான்காவது தாரமாக இருபத்தைந்து வயதுடைய அழகிய இளமங்கை ஒருத்தியை பெரும் பொருட்செலவில் கலியாணம் செய்துகொண்டார். அந்த நான்காவது மனைவியிடம் அவர் கொண்டிருந்த காதல்—இல்லை—ஆசை-வர்ணனைக்கு அடங்காததாகும்.

முதுமைப் பருவத்தின் பயனாக ஏற்பட்ட மனச்சோர்வை, தமது புது மனைவி தனது உல்லாச சரச—லீலைகளால் முற்றிலும் மறக்கடித்து, என்றும் சலிக்காத இன்பத்தைத் தமக்கு ஊட்டுவாளென்று முதலியார் உறுதியாக நம்பியிருந்தார். ஆனால், அந்தப் பாழும் க்ஷயரோகத்துடன் இன்னும் சில சில்லரை நோய்களும் சேர்ந்துகொண்டு, முதலியாரைப் படுக்கையில் கிடத்தி விட்டன. முதலியாரின் நான்காவது மனைவியாகிய லீலாவதி, அவர் படுக்கையில் படுத்துக் கிடந்த போதும் அவருக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளையெல்லாம் குறைவின்றி செய்து வந்தாள். அந்த 'அறுபது' வயதுக் கிழக் கணவனுக்கு, அந்த இருபத்தைந்து வயது யுவதி சலிப்பின்றி பணிவிடைகள் செய்ய மனந் துணிந்ததன் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்? 'பதி-பக்தி'யின் வலிமையா? அதுதான் இல்லை!

முதலியாரின் படுக்கையறைக்குள், அவரைப் பார்க்க வைத்தியரோ மற்றவர்களோ வாராதபோதெல்லாம், லீலாவதி

தனது கணவனைவிட்டுப் பிரிவதேயில்லை. அவளது மதிமுகத்தின் அழகைக் கண்குளிரக் கண்டும் மென்மையான அழகிய கைகளின் ஸ்பரிசம் பெற்றும் பெரிதும் மகிழ்ந்த முதலியார், அம் மகிழ்ச்சிப் பெருக்கில் தனது நோயின் வலியைக்கூட மறந்து போய்விட்டாரென்றால், லீலாவதி எவ்வாறு அவருக்குப் பணிவிடை செய்திருக்க வேண்டுமென்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்களேன்! முதலியார் படுக்கையிற் படுத்த ஒருமாத காலத்திற்குள், லீலாவதி அவரது பெரும் சொத்து முழுவதையும் தனக்கே சேருமாறு உயில் எழுதி வாங்கி வைத்துக் கொண்டு விட்டாள். அவ் வுயிலை எழுதி வாங்கிக் கொள்வதற்குள், அவள் முதலியாரிடம் செய்த சரச—லீலைகளும் அவருக்கு அளித்த ஆசை முத்தங்களும் கணக்கில் அடங்கா.

ஒருநாள் மாலை, முதலியாருக்கும் லீலாவுக்கும் இடையில் பின்வருமாறு சம்பாஷணை நடைபெறலாயிற்று:—

“கண்ணே! என் உடம்பு இருக்கிறதைப் பாத்தா, இன்னம் பத்துப் பன்னெண்டு நாளுக்குள்ளே நான் போயிடுவேன் போலிருக்குது. என்னைக் கட்டிக்கிட்டு நீ என்ன சுகத்தைக் கண்டே? அந்தப் பாழும் பிரமா, இன்னம் அஞ்சாறு வருஷமாவது என்னை இந்தப் பூமியிலே வச்சிருக்கக் கூடாதா? நான் போறதுக்காகக்கூட கவலைப்படலே; என்மேலே இவ்வளவு ஆசையா யிருக்கிற நீ, நான் போயிட்டப்புறம் என்னமா காலங் கழிப்பேண்றதை நெனக்கச்சேதான், துக்கம் நெஞ்சை அடைச்சுக்கிறது!”

“ஐயையோ, உங்க வாயாலே அப்படிச் சொல்லாதீங்க! உங்க உடம்பு சிக்கிரம் குணமாவணும்னு, நான் நித்த நித்தம் எத்தனை சாமிகளை வேண்டிக்கிறேன் தெரியுமா? நீங்க கொஞ்சங்கூட வீணா கவலைப்படவேணாம்; கடவுள் கிருபையாலே, உங்களுக்குச் சீக்கிரம் சௌக்கியமாயிடும். நீங்க ஒண்ணுக்கும் பயப்படவாணாம்.”

“என்னமோ லீலா! நீ என்மேலே வச்சிருக்கிற ஆசையினாலே என்னென்னமோ சொல்றே! என் உடம்பு எந்த மாதிரி இருக்குதுங்கிறது, எனக்குத் தெரியும். இந்த பூமியிலே, இன்னும் பத்து நாளைக்குமேலே நான் நிச்சயமா தங்க மாட்டேன். எனக்கப்புறம், நானில்லாமே நீ எப்படி காலங் கழிப்பேங்கிறதை நெனக்கச்சேதான், எனக்கு ரொம்ப வருத்தமா யிருக்குது.”

“கடவுள் கிருபையாலே, உங்களுக்கு ஒண்ணும் ஆபத்து வாராது. ஒருவேளை, நீங்க என்னை விட்டுட்டுப் போயிட்டா, நான் மாத்திரம் உங்களை விட்டுட்டு இந்த பூமியிலே உசுரை வச்சிக்கிட்டு தன்னந் தனியா காலங் கழிப்பேன்னு நெனச்சிக்கிட்டீங்களா என்ன? அவ்வளவு நெஞ்சழுத்தக்காரியா நான்? நீங்க என்னை விட்டுட்டுப் போயிட்டால், அப்புறம் எனக்கு மாத்திரம் இந்த உலகத்திலே என்ன வேலை? புருஷனைப் பறி கொடுத்துட்டு மனம் போனபடி பணத்தைச் செலவழிக்கிறதுக்கு நான் ஒரு தேவடியாளா என்ன? நீங்க இல்லாதம்போது, எனக்கு எவ்வளவு சொத்து இருந்தால் தான் என்ன பலன்? பாழும் பணத்தைப் பை கட்டி வச்சிக்கிட்டு ராவும் பகலுமா காத்துக் கிட்டிருக்க, நான் பணப்பித்து பிடிச்ச பேயா என்ன? இந்த உலகத்தை விட்டு நீங்க போயிட்டவப்புறம், எனக்கு மாத்திரம் இங்கே என்ன வேலை? உங்க உசுரு உங்க உடம்பைவிட்டு நீங்கிட்டுதுன்னு கேட்டவுடனே, என் உசுரும் என் உடம்பை விட்டுப் போயிடாதா என்ன? ஒருவேளை, அந்தமாதிரி என் உசுரு தானா போவாட்டி போனால், மசானத்திலே உங்க உடம்பு எரியறபோது குடுகுடுன்னு ஓடியாந்து அதிலே குதிச்சி உங்க உடம்பைக் கட்டித் தழுவிப் படுத்துக்க மாட்டேனா! உங்க உசுரு போயிட்டவுடனே, நானும் குங்கும மஞ்சளோடே குளுந்த மனத்தோடே உடன்கட்டை ஏறாட்டிப்போனால், என் பேர் லீலாவதியா என்ன!”

"ஐயையோ, என் கண்ணில்லே நீ! பெண் புத்தியாலே அவசரப்பட்டு நீ சொன்னமாதிரி ஏதாச்சும் செய்துடப் போறே! உன் பட்டு உடம்பு—தங்க உடம்பு—எரியற நெருப்பிலே விழுந்து துடிதுடிக்கிறதைப் பார்த்தா, என் ஆத்துமா பொறுக்க முடியாத சித்திர வதையை அனுபவிக்குமே! அப்புறம், செத்தும் எனக்கு சாந்தி இல்லாமல் போயிடும். தெரியாத்தனமா அந்த மாதிரியா ஏதாச்சும் செய்துடப்போறே! உனக்குத்தான் போதுமான சொத்து வச்சிருக்கேனே! அந்த சொத்தை வச்சி ஆண்டுக்கிட்டு, என்னை மாத்திரம் மறந்துடாமே நித்த நித்தம் நெனச்சிக்கிட்டிரு."

* * *

தனது புதிய இளமனைவியின் உண்மையான மனப்பான்மையைச் சோதித்தறிய வேண்டுமென்னும் ஆர்வம், முதலியார் மனத்தில் தோன்றியது. எனவே, ஒருநாள் அவர் மிகுந்த சிரமப்பட்டுக் கொஞ்சநேரம் தமது மூச்சை அடக்கிக்கொண்டு கிடந்தார். திடீரென்று தனது கணவனின் மூச்சு நின்று விட்டதை அவரது மூக்கில் கை வைத்துப் பார்த்து உணர்ந்துகொண்ட லீலாவின் கண்களிலிருந்து இரண்டுதுளி கண்ணீர் கூட பூமியில் விழவில்லை. தனது கணவனின் பிரிவைக் குறித்து, அவள் ஒப்புக்கேனும் ஒப்பாரி பாடிப் புலம்பவுமில்லை. தாங்கள் பல வருஷங்களாகக் கற்றறிந்து வைத்துள்ள ஒப்பாரியை ஆசைதீரப் பாடி ஆவலைத் தீர்த்துக்கொள்ளக் கூடியவாறு, படுக்கையிற் கிடந்த முதலியார் எப்பொழுது இறப்பாரோ என்று நீண்ட காலமாகக் காத்திருந்த அண்டை—அயல் வீட்டுப் பெண்களெல்லோரும் முதலியார் வீட்டுக்கு விரைந்து வந்து ஒப்பாரி பாடிப் புலம்பத் தொடங்கினார்கள். அப்பொழுது கூட, ஒப்புக்காவது அவர்களுடன் சேர்ந்து ஒருமுறை புலம்ப மனங்கொள்ளாத லீலாவதி, தனது கணவன் பணமும் பத்திரங்களும் வைத்துள்ள இரும்பு பெட்டியின் சாவியைக் கண்டு பிடிப்பதில் முனைந்து விட்டாள். முதலியாரின் தலையணையையும் படுக்கையையும் நன்றாகப் பரிசோதித்த பின்னும் சாவி கிடைக்காமையால், அவள் அவரது அரைஞாணைத் தடவிப் பார்த்தாள். அப்பொழுதும் சாவி கிடைக்காமற் போய்விட்டதன் பயனாக மிகுந்த வெறுப்படைந்த அவள், வேறு எந்த காரியத்தையும் கவனிக்காமல் எட்டிப்போய் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு விட்டாள்.

லீலாவதியின் செயல்களைக் கவனித்து உணர்ந்த முதலியார், தூக்கத்திலிருந்து விழித்தெழுபவரைப்போல் திடீரென்று எழுந்து உட்கார்ந்து கொண்டு விட்டார். அக் காட்சியைக் கண்ட மற்றவர்களெல்லோரும், மாண்டவர் மீண்டும் பிழைத்துக்கொண்டு விட்டாரேயென்று பெரிதும் மகிழ்ந்து இடி இடியென்று சிரிக்கலாயினர். மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்த லீலாவதியோ, எதிர்பாராத சம்பவத்தைக் கண்டு பெரிதும் திடுக்கிட்டுத் தலை குப்புறப் படுத்துக்கொண்டாள். முதலியார் அவளை நோக்கி, "என்ன லீலா! நான் செத்தவுடனே என்கூடவே உடன்கட்டை ஏறறவளா, அவ்வளவு ஆத்திரத்தோடே இரும்புப்பெட்டிச் சாவியைத் தேடிப்பார்த்தே! இன்னுமே, அந்த சாவி உன் கையிலே எந்த காலத்துக்கும் சிக்கவே சிக்காது? இதுக்குத்தானா, இவ்வளவு காலமா உத்தம பத்தினி மாதிரி வேஷம் போட்டு நடிச்சிக்கிட்டிருந்தே?"- என்றார். பின்னர், சில நாட்களில் இறைவனது இன்னருளால் முதலியார் முற்றிலும் குணமடைந்து படுக்கையைவிட்டு எழுந்து விட்டார். பழைய உயில் ரத்து செய்யப்பட்டு, புதிய உயில் எழுதி முடிக்கப்பட்டது. லீலாவதி அனுபவிக்கவிருந்த சொத்துக்களையெல்லாம், திருக்கடையூர்ச் சிவபெருமான் தமக்கே உரிமைப்படுத்திக்கொண்டு விட்டார்! தன் கணவனுடன் 'சக-கமனம்' செய்யப் போவதாக நடித்த லீலாவதி, தன் கணவன் முகத்தை ஏறிட்டு நோக்கவும் மனமில்லாதவளாய்த் தனது தாய் வீட்டுக்குப் போய்விட்டாள்.

கொலைஞர் மகாநாடு

:(0):

(சாமி.)

கொலைஞர்கள் மாநா டொன்று கூடினர் அதற்கு எச்சில்
இலைகளில் குப்பை மேட்டில் எலிகளின் முதுகில் நாற்றத்
தலைதனில் சகதிக் குட்டைச் சாக்கடைப் படுக்கை கட்டில்
நிலையினி லிருந்து வந்து நிறைந்தனர் வீரரெல்லாம். (1)

ஈயாரின் தலைமைப் பேருரை

ஈக்களுக் காசைத் தேர்ந்து இருஞ் சபைத் தலைவராக
ஆக்கினர்; அவர் எழுந்து "அன்பரே! மனிதர் ஆவி
போக்கிடும் எமனுக் காகப் பூமியில் செய்யும் தொண்டை
ஊக்கங் கொண்டியற்ற வேண்டும் ஒருவர்க்கும் பயந்தி டாதீர்! (2)

சுகவழி யறியா மாதர் துணையுள்ள வரைக்கும் டாக்டர்
பகையுள ஹெல்த் ஆபீஸர்ப் பதர்களுக் கஞ்ச வேண்டாம்
சகதியோ டசுத்தம் குப்பை, சாக்கடை படை வீடாக்கிச்
செகமதில் போரைச் செய்து ஜெயக்கொடி நாட்ட வேண்டும். (3)

எம்மினத் தார்கள் செய்யும் எதிரிலாத் தொண்டைக் கேண்மின்!
வெம்மலம் எச்சில் கோழை மேவுஞ் சாக்கடையி லுள்ள
இம்மியிற் சிறிதாய்த் தோன்றும் எண்ணிலா விஷப் புழுக்கள்
தம்மை எங்காலால் வாரிச் சாருவோம் மனிதர் பக்கல். (4)

வானத்திற் பறந்து சென்று வன்பெருங் குண்டு போட்டு
மானிடர் தம்மைக் கொல்லும் வண்ணம்போல் பறந்து சென்று
பானத்தில் உணவில் தின்னும் பலவகைப் பண்டந் தன்னில்
ஈனஞ் செய் கிருமிதன்னை இறைத்தவை நிறைந்து வைப்போம். (5)

குண்டுகள் வெடித்து ஆவி கொள்வது போல் அப்பண்டம்
உண்டதும் வாந்தி பேதி உலைத்திடும் சீத பேதி
கண்டிடும் க்ஷயத்தி னோடு கடுவிஷச் சுரமும் போக்கும்
மண்டியே மக்கள் தம்மை மடித்திடும் அளவில் லாமல். (6)

இங்ஙனம் தலைவர் கூறி, இங்கு வந்துள்ள நண்பர்
தங்கள் பேரினங்கள் செய்யுந் தளர்விலாத் தொண்டை மீண்டு
சங்கையில் லாமற் சாற்றிச் சகலர்க்கும் ஊக்கந் தந்து
எங்கும் நம்தொழில் முன்னேற இயற்றுவீர்" என அமர்ந்தார். (7)

கோசுவின் பிரசங்கம்

கொசுவெனும் வீரர் கூறுவா ரெழுந்து "கங்குல் முழுதும் எங்க ளாட்சியில் பிணியுடை யோருடல் பெருகுங் கிருமியை செந்நீரோடுஞ் சேர்த்து இழுத்து, மற்றோ ருடல்மேல் வந்துட்கார்ந்து தும்பிக்கைபோல் தோன்றும் எம்மூக்கை அம்புபோல் நுழைத்து அவைகளை விட்டு மலைஜுரத்தோடு மஞ்சள் ஜுரமும் முடக்கு ஜுரமும் முரடு யானைக்கால் பல்வகை நோயைப் பரப்புவோம்"
என்றார்.

தெள்ளு

தெள்ளெனும் வீரர் செப்புவார் "நாங்கள்
கொள்ளை நோய்க் குரிய கொடுவிஷக் கிருமியை
எலிகள்தன் னிடமிருந் தெடுத்துச் சென்று
பலபே ருடலிற் பதித்து, அவர் தம்மை
எமனுக் களிப்போம்" என்று அமர்ந்தார். (9)

பேன்

பேனெனும் பெரியார் பேசுவார் "நாங்கள்,
மானிடர் தலையிலும் உடையிலும் வாழ்ந்து
குருதியை உறிஞ்சிக் குடித்துப் புனர்ஜுரம்
பெருகும் சன்னிபாதச் சுரத்துடன்
பல்வகைச் சுரத்தைப் பரப்புவோம்" என்றார். (10)

மூட்டைப்பூச்சி

மூட்டையா ரெழுந்து மொழிவார் "எம்மனோர்,
வீட்டின் முகட்டிலும் வெடிப்புச் சுவற்றினும்
கட்டில் மெத்தையில் காந்து வசித்து
மட்டில் குருதியை வாய்மடுத்து, அவர்க்கு
குஷ்டம் மேகம் கொடு க்ஷயம் முதலிய
கஷ்டநோய் அளித்துக் கலக்குவோம்" என்றார். (11)

இன்னும் பலரும் தன்னினத் தொண்டைச்
சொன்ன பின்தலைவர், "சுறுசுறுப்புடன் நம்
வேலையைச் செய்து வெற்றிக் கொடியை
ஞாலந் தன்னில் நாட்டுவோம்" என்று,
முடிவுரை கூறி முடித்தனர் சபையை. (12)

இதோ வெளிவந்துவிட்டது!

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!!

முன்பு பார்த்த படமல்ல! முற்றிலும் புதிது!!

நளாயினி

(மகத்தான புராண புண்ணிய சரிதை.)

கோலாப்பூர் தயாரிப்பு

என்பதை

ஞாபகத்தில் வையுங்கள்.

விலாசம் :-

ஓரியண்டல் சௌண்ட் பிக்சர்ஸ்

லிமிடெட், திருப்பூர்.

மங்கள விலாசத்தின் மர்மம்

—:(0):—

(மேலப்புதூர்-வி. எம். ஸாமி.)

காலை மணி 9 இருக்கும். திருச்சி கண்டோன்மெண்டில் 'சுந்தாரபாக்' என்று குறிக்கப்பட்டிருந்த ஓர் பங்களாவின் அறையொன்றில், கம்பீரத் தோற்றமும் முக வசீகரமு மமைந்த பெரிய மனிதரொருவர் அழகிய நாற்காலி

யொன்றில் அமர்ந்து தினசரிப் பத்திரிகையைப் புரட்டி புரட்டி பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்கு எதிரிலிருந்த மேஜையின்மீது சட்டப் புத்தகங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பத்திரிகையை மிகவும் ஊக்கமாக வாசித்துக்கொண்டிருந்த அவர் "கிர்"ரென்று டெலிபோன் மணி அடிப்பதைக் கேட்டு நாற்காலியை விட்டு சடக்கென்று எழுந்திருந்து மணி அடிக்கும் இடத்திற்குச் சென்று டெலிபோனில் பேச ஆரம்பித்தார். "நான்தான் போலீஸ் இன்ஸ்பெக்டர், முராரி ராவ். நீங்கள் யார் பேசுறது; சீக்கிரம் சொல்லுங்கள்" என்றார்.

பதில்:—நான் டாக்டர் சாமிநாத சாஸ்திரி. என் மகள் சௌந்தரவல்லி நேற்றிரவு இருந்தவள் இன்று காலையில் காணோம். எனக்கு ஒன்றும் புலப்படவில்லை. தாங்கள் உடனே தகுந்த முயற்சியெடுத்துக்கொள்வீர்களென்று நம்புகின்றேன்.

இன்ஸ்பெக்டர் :—பெண்ணின் மீது விலை மதிக்கக்கூடிய நகைகள் ஏதாவது இருந்தனவா ?

சாஸ்திரி:—அப்படி ஒன்றும் கிடையாது.

இன்ஸ்பெக்டர் :—"சரி. நீங்கள் உடனே புறப்பட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு வாருங்கள். எல்லா விஷயமும் நேரில் விரிவாகப் பேசிக்கொள்ளலாம்" என்று பேச்சை முடித்துவிட்டு அறையில் சிறிதுநேரம் உலாவிக் கொண்டிருந்தார் நமது இன்ஸ்பெக்டர் முராரி ராவ். யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

உடனே இன்ஸ்பெக்டர் கதவைத் திறக்க தபால்கார னொருவன் அடக்கமாக ஓர் சலூட் (சலாம்) செய்து நீண்டதோர் கவர் ஒன்றை இன்ஸ்பெக்டரிடம் கொடுத்து வெளியே சென்றான். இன்ஸ்பெக்டர் அக்கவரை உடைத்து அதனுள்ளிருந்த கடிதத்தைப் படித்து "கொல்" லென்று சிரித்தார். அக்கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"இன்ஸ்பெக்டர் முராரி ராவ்

அவர்களுக்கு—

தாங்கள் மிகுந்த சமர்த்தரென்று எனக்குத் தெரியும். உம்மையும் லட்சியம் செய்யாமல் இக்காரியத்தில் ஈடுபட்டுள்ள நான் எவ்வளவு சாமர்த்தியசாலி யென்று நீரே தெரிந்துகொள்ளும்.—இப்படிக்கு,

....

கடிதத்தை மடித்து பையில் போட்டுக்கொண்ட இன்ஸ்பெக்டர் வாயிற்படியண்டை வந்து 'ஒன் நாட் டு' (102) என்று ஓர் சத்தம் போட்டார். உடனே கருத்து, தடித்த மீசைகளையுடைய ஓர் போலீஸ் ஜவான் அவர் முன்னிலையில் தோன்றி பலத்த ஓர் சலூட் (சலாம்) அடித்து நின்றான். இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்து "நீ உடனே சைகிளில் போய் துப்பறியும் ரங்கைய நாயுடுவை அழைத்துக்கொண்டு ஸ்டேஷனுக்கு வா" என்று கூறிவிட்டு பங்களாவின் உள்ளே



சென்று சிறிது நேரத்திற்குள் உடை தரித்துக்கொண்டு வெளியே வந்தார். தனக்காகக் காத்துக்கொண்டிருந்த மோட்டாரில் இன்ஸ்பெக்டர் ஏறி உட்கார வண்டியும் "விர்"ரென்று புறப்பட்டது.

திருச்சி போலீஸ் ஸ்டேஷனில் ஓர் சிறிய அறையில் இருவர் பின்வருமாறு சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள். துப்பறியும் ரங்கையா நாயுடு:—"என்ன டாக்டர் சார். எதிர்பாராதபடி இவ்வளவு துணிச்சலான வேலை நடந்திருக்கிறதே!

டாக்டர் சாமிநாத சாஸ்திரி:—உங்களைப்போன்ற போலீஸ் உத்தியோகஸ்தர்களின் நெருங்கிய பழக்கமிருந்தும் இவ்வித ஆபத்து வந்ததை நினைத்தால் எனக்கே ஆச்சரியமாக இருக்கின்றது சார்.

நாயுடு :—என்ன பிரமாதம் நடந்துவிட்டதென்று பயப்படுகிறீர்கள். ஒன்றுமில்லை. பொறுங்கள். இன்னும் அரை மணி நேரத்தில் எல்லாம் தெரிந்துவிடும்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கையில் இன்ஸ்பெக்டர் ஏறிவந்த மோட்டார் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தது. இன்ஸ்பெக்டர் மோட்டாரை விட்டிறங்கி சரேலென்று தன் அறைக்குள் நுழைந்தார்.

ரங்கைய நாயுடு:—குட் மார்னிங் சார். பயல்கள் நம்மிடத்திலேயே வேலையை காண்பித்துவிட்டார்கள் போல் இருக்கின்றதே. இனி சரியான சூடு கொடுக்கவேண்டியதுதான்.

இன்ஸ்பெக்டர் :—என்ன நாயுடு. இவ்வளவு அலட்சியமாகப் பேசிவிட்டீர்கள். காரியம் மிகவும் நுணுக்கமாகவல்லவோ நடந்திருக்கிறது. எங்கே இக்கேசில் தங்களுக்குப் புலப்படும் யோஜனைகளைச் சொல்லுங்கள்; பார்ப்போம்.

நாயுடு (தலையை சொரிந்துகொண்டு) ஆமாம் சர். நானும் ஊன்றிப் பார்க்காமல் வேடிக்கையாகப் பேசிவிட்டேன். இக்கேசில் எனக்கு ஒன்றுமே புலப்படவில்லை.

இன்ஸ்பெக்டர் :— அதிருக்கட்டும். இந்த டாக்டருக்குத் தாங்கள் 7, 8 வருடங்களாகத் தெரியுமல்லவா?

நாயுடு:—என்ன இப்படி கேட்கின்றீர்கள்? இவருடைய "மங்கள விலாசத்தில்" தானே நான் இந்த 7, 8 வருடங்களாக குடியிருந்து வருகின்றேன். இவர்கள் குடும்பம் எனக்கு ரொம்பவும் பழக்கமாச்சே.

இன்ஸ்பெக்டர்:—"சரி. நீங்கள் சென்று வாருங்கள். நான் இவரிடம் ஓர் வாக்குமூலம் வாங்குகின்றேன்." "சரி அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லி நாயுடுவும் இன்ஸ்பெக்டரிடம் விடைபெற்றுச் சென்றார்.

• • •

நமது துப்பறியும் ரங்கையா நாயுடு காருவை சிறிது கவனிப்போம். அழகிய தோற்றம். இள வயது. கம்பீர பார்வை. கட்டுமஸ்தான தேகம். தஞ்சையில் பிறந்து வளர்ந்தவர். இன்னும் மணமாகவில்லை. தான் மாத்திரம் ஒரு சமயல் காரனுடனும் இரண்டு வேலைக்காருடனும் வசித்து வருகின்றார். இவர் இத் துப்பறியும் தொழிலில் ஈடுபட்டு சொற்ப வருடங்களே யாயினும் பலரும் புகழும் ஓர் நிபுணராக விளங்குகிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்த கேசில் நாயுடு அதிக முயற்சி யெடுக்கத் தொடங்கினாரென்று சொல்வதற்கு இடமில்லை.

நாயுடு ஸ்டேஷனை விட்டுச் சென்றதும் இன்ஸ்பெக்டர் டாக்டர் சாமிநாத சாஸ்திரியைப் பார்த்து:–'நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். உங்கள் பெண்ணை இன்னும் ஒரு வாரத்திற்குள் காண்பீர்கள்' என்று சொல்லி சாஸ்திரிகளை வீட்டிற்கு அனுப்பிவிட்டு தம் வேலையைக் கவனித்தார். தனக்குக் காலையில் வந்த கடிதத்தையும், கவரின் மேலிருந்த முத்திரைகளையும் திருப்பித் திருப்பிப் பார்த்தார். ஏதோ சில டைரிகளைப் புரட்டி சில இடங்களை மார்க் செய்துகொண்டார். சற்று நேரம் கழித்து மனம் சந்தோஷமடைந்தவராய் பங்களாவிற்குத் திரும்பினார்.

• • •

கேஸ் நடந்த நான்காம் நாள் மாலை மணி 6 இருக்கும். இன்ஸ்பெக்டர் டெலிபோனில் துப்பறிபவருடன் பேசிக்கொண்டிருந்தார். "தாங்கள் இதுவரையிலும் ஒருவித தகவலும் கொடுக்காததற்கு வருந்துகின்றேன்"

துப்பறியும் நாயுடு:—"எனக்கு இது வரையிலும் ஒன்றும் தோன்றவில்லை. என் சர்விசிலேயே இதைப்போன்ற கேசில் நான் ஈடுபட்டதில்லை. தயவுசெய்து தாங்களே எல்லா வேலையும் பார்த்துக்கொள்ளுங்கள்."

இன்ஸ்பெக்டர்:-'ரொம்பவும் சந்தோஷம். எனக்கு இன்று ஒரு "இன்பர்மேஷன்" கிடைத்திருக்கிறது. தாங்கள் கட்டாயம் என்னுடன் நாளை காலை 6 மணி வண்டியில் தஞ்சைக்கு வரவேண்டியது. நாளை இரவே 11 மணி வண்டியில் திருச்சிக்குத் திரும்பிவிடுவோம்."

நாயுடு:—"அதற்கென்ன! அப்படியே செய்வோம்." இத்துடன் பேச்சு முடிய இன்ஸ்பெக்டர் தம் அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கினார்.

துப்பறியும் ரங்கைய நாயுடுவுக்குத் தஞ்சை சொந்தமான ஊர் என்று முன்னமேயே கூறினோம். இன்ஸ்பெக்டர் சொல்லியபடி தஞ்சைக்குப் போகத் தயாரான நாயுடு தன் இரு வேலைக்காரர்களையும் கூப்பிட்டு "இன்று இரவு 11-30 மணிக்கு கட்டாயம் வந்துவிடுவேன். பத்திரமாக நடந்துகொள்ளவேண்டியது. உங்களுக்கு நான் அதிகம் சொல்லத் தேவையில்லை" என்று எச்சரிக்கை செய்துவிட்டு நேரே திருச்சி ஜங்ஷன்வந்து சேர்ந்தார். அங்கு நாயுடுக்காகக் காத்துக்கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் இவரைசந்திக்க இருவரும் ரயிலேறி தஞ்சை வந்து சேர்ந்தனர். இன்ஸ்பெக்டர் துப்பறிபவரைப் பார்த்து, "தாங்கள் இன்று சாயந்திரம் 7-மணிக்கு என்னை போலீஸ் ஸ்டேஷனில் சந்தியுங்கள்" என்று சொல்ல, நாயுடுவும் சரியென்று விடை பெற்றுக் கொள்ள இருவரும் தத்தம் ஜாகைக்குச் சென்றனர்.

இரவு மணி 7. இன்ஸ்பெக்டர் முராரி ராவ் தஞ்சை போலீஸ் ஸ்டேஷனில் இரண்டு ஜவான்களுடன் 'குசு குசு' வென்று பேசிக் கொண்டிருக்கும் சமயம் ரங்கையா நாயுடு அங்கு வந்து சேர்ந்தார். இன்ஸ்பெக்டர் அவரைப் பார்த்து:—"நாம் வந்த காரியம் நாளை காலை 8 மணிக்குத் தான் முடியும் போல் இருக்கின்றது. தாங்கள் அவசியம் நாளை காலை வந்து என்னை இங்கு சந்திக்க வேண்டியது' என்றார். "சரி, அப்படியே" என்று சொல்லி நம் நாயுடு தம் ஜாகைக்குச் சென்றார்.

....

இன்ஸ்பெக்டரும், துப்பறியும் நாயுடுவும் தஞ்சையில் தங்கியிருந்த அன்றிரவு

மணி 10 இருக்கும். தஞ்சையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் பாதையில் ஓர் மோட்டார் வாயுவேக மனோவேகமாகப் போய்க் கொண்டிருந்தது. மோட்டாருக்குள் நமது இன்ஸ்பெக்டர் துப்பறியும் நாயுடுவைப் போல் உடை தரித்துக் கொண்டு இரண்டு முரட்டு மனிதர்களுடன் உட்கார்ந்திருந்தார். திருச்சி நெருங்கியதும் மோட்டார் மெதுவாக ஓட்டப்பட்டு சரியாக மணி 11-க்கு மங்கள விலாசத்தின் முன் வந்து நின்றது. துப்பறியும் நாயுடுவின் வேலைக்காரர்கள் திடுக்கென்று எழுந்திருந்து தூக்க மயக்கத்தில் கண்களைத் துடைத்துக் கொண்டு நின்றனர். இன்ஸ்பெக்டர் காரை விட்டிறங்கி நேரே பங்களாவிற்குள் சென்று கதவைத் தட்டித் தாழ்ந்த குரலில் "சௌந்தரா சௌந்தரா" வென்று கூப்பிட்டார். நாயுடுவின் வருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தவர்கள் போல் யாரோ அவசரமாக மாடியிலிருந்து இறங்கி வருவது போல் தோன்றிற்று..........சிறிது நேரத்திற்குள் உள்ளே மின்சார விளக்குப் பொருத்தப்பட்டு தாளிட்ட கதவு அதிவேகமாய் திறக்கப்பட்டது. அவ்வளவுதான் அங்கு நடந்ததென்று சொல்லலாம். டாக்டர் சாமிநாத சாஸ்திரியின் குமாரத்தி சௌந்தரவல்லி கை கால்கள் நடுக்கமுடன், திகைப்புற்று, அசைவற்று இன்ஸ்பெக்டர் முன்னிலையில் நின்றாள். முராரிராவ் சிறிது நேரமும் வீணாக்காமல் உடனே அப் பெண்ணைத் தூக்கிக் கொண்டு வேகமாக ஓடிவந்து காரில் அப் பெண்ணுடன் ஏறிக் கொண்டார்.—கார் "விர்" ரென்று புறப்பட்டது. மறுநாள் தினசரிப் பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"அதிசயத்திலும் அதிசயம்"

வேலியே பயிரை மேய்ந்தது.

திருச்சி சாமிநாத சாஸ்திரியின் குமாரத்தி சௌந்தரவல்லியை தூக்கிச் சென்றதாக துப்பறியும் ரங்கையா நாயுடு சிறைப் படுத்தப் பட்டிருக்கிறார். கேஸ் அடுத்த வாரம் விசாரணைக்கு கொண்டுவரப்படும்."

காதலனா? காதகனா?

(நவரசந் ததும்பும் நவீனம்.)

'கண்டதுங் காதல்!' 'கேட்டதுங் காதல்!' என்றெல்லாம் மதிமயங்கிக் கெட்டலையும் வாலிபர்களுக்கு இவ்வற்புத மிகுந்த கற்பிதக் கதை தகுந்தவாறு புத்தி புகட்டி, உண்மைக்காதல் இதுவென உணர்த்துகிறது. கலாசாலை மாணவ மாணவிகளின் ஆடம்பர வாழ்க்கையையும் விபரீதப் போக்கையும் அதனால் அவர்கள் அடையும் சீர்கேட்டையும் இந்நூல் ஆசிரியர் அப்படியே தம் இனிய எளிய நடையால் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார். இவ்வருமையான நாவல் ஒவ்வொரு தமிழ் மகன் கையிலும் இருக்கவேண்டிய தவசியம். சொற்ப பிரதிகளே கைவசமிருக்கின்றன. உடனே ஆர்டர் செய்யுங்கள்.

இதன் விலை அணா 10 தான்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.



மணிக்கெதிரில் பிசாசு!

—(0)—

("அநுஜன்.")

"தாதா எனக்கொரு கதை சொல்லு" என்றான் மணி.

"சொன்னால் எனக்கு என்ன தருவாய்?" என்று கேட்டேன்.

"அம்மா எனக்குத் தரும் சாக்லெட்டு அத்தனையும் தந்துவிடுகிறேன்"

"அது போறாது"

"அப்பறம் அக்கா லோப்புப் பெட்டியில் வைத்திருக்கும் உல்லன் நூலும், அண்ணா ஜேபியிலிருந்து, வெள்ளிக் காயிதம், காலி சிகரெட்டுப் புட்டி........."

"போடா திருடா. அதுவும் போறாது"

"அப்டீன்னா நீ சொல்ற கதையெல்லாம் பிரசண்ட விகடனுக்கு எழுதி, விகடமாமா தரும் காசுக்கு டின் டின்னா சாக்லெட்டு. உல்லன் நூலு.........."

"ஊம்.........ஹூம்......அதுவ்வும் போறாது" என்று சிறிது பயத்துடனும், தீர்மானத்துடனும் சொன்னேன்.

மணியின் முகம் சிவந்தது. சட்டென்று பூனைபோல் என்மேல் பாய்ந்து கழுத்தைப் பிடித்து தூக்கி, இப்பக்கமும் அப்பக்கமும் ஆடி "இது போறுமா, போறுமா" என்று உலுக்கினான்.

"போறுமடா. போறுமடா...இதோ சொல்லி விட்டேன் கதை. உனக்கென்ன கதை வேணுமோ அதுவே சொல்லுகிறேனடா....விடுடா" என்று கெஞ்சினேன்.

"ஊம். என்ன கதையெல்லாம் சொல்லுவை."

"குள்ளநரி கதை, காக்காயும் குருவியும் கதை, டபாஸ் கதை, அப்பறம் பயில்வான் கதை எல்லாம் சொல்லுவேன். உனக்கெதுவேண்டும். சொல்லு."

"ஊம். பயில்வான் கதை" என்று விறைப்பாய் சிப்பாய்போல நின்று கொண்டு கேட்டான்.

"சரி, சொல்லுகிறேன். ஆனால் நடுவில் கேள்விகேட்டு தடங்கல் பண்ணப்படாது."

"சரி, ஆகட்டும்."

.........."ஒரே ஒரு ஊரில் ஒரு பிரபல பயில்வான்.......குஸ்தி. பயில்வான் இருந்தான். குஸ்தியில் அவன் மகா தீரன். போட்டி குஸ்தி போட்டு போட்டு ஜெயித்து நிறைய பணம் சேமித்து வைத்திருந்தான். இது 3 பக்கா திருடர்களுக்குத் தெரிந்தது. என்றைக்காவது ஒருநாள் வீட்டில் கன்னம் வைத்து புகுந்து பணத்தை அடித்துக்கொண்டு போகத் தீர்மானித்தார்கள். அதன் பிரகாரமே ஒருநாள் நடுராத்திரி சமயம் மெதுவாக கொல்லைப்பக்கம் வந்து கன்னம் வைத்து உட்புகுந்தார்கள். அன்று பயில்வானுக்கு கை சுளுக்கி கொண்டதினால் குஸ்தியில் தோல்வி; மிகவும் ஆத்திரமாக சாப்பிடாமலேயே படுக்க போயிருந்தான். மணி

12 ஆகியும் தூக்கமே பிடிக்கவில்லை அப்பொழுது இவர்கள் குசு குசு என்று பேசுவது காதில் விழுந்தது. வீட்டில் தன்னைத் தவிர வேறெவரும் இல்லை யாகையால் திருடர்கள் தானென்று தெரிந்து கொண்டு உற்றுக்கேட்டான். அவர்கள் இவன் படுத்திருந்த இடத்தை நோக்கி வருவது தெரிந்தது. உடனே சந்தடி செய்யாமல், தனது குண்டாந்தடியை எடுத்துக் கொண்டு பதுங்கி நின்றான். திருடர்கள் ஒவ்வொருவராக மூவரும் உள்ளே நுழைந்தார்கள். சட்டென்று பயில்வான் கதவைச் சாத்தினான். பிறகு இருட்டில் படேர், படேர் என்று ஒவ்வொருவன் முதுகிலும் மண்டையிலும்......"

"தாதா, அந்த குண்டாந்தடிக்கு உன்னுடையதுபோல, இரும்புப்பூண் போட்டிருந்ததா?"

"ஆமாம். நல்ல கெட்டி இரும்புப் பூண் போட்டிருந்த பக்கத்தால் ஒவ்வொருவனையும் வச்சு விளாசினான்."

"எப்படி! இப்படியா?" என்று மணி என் தடியைத் தொட்டான்.

"டேய். நடுவில் கேட்டால் கதைபோயிடும்."

"சரி, இனிமேலில்லை" என்று கன்னத்தில் போட்டுக்கொண்டு அப்புறம்....? என்று கேட்டான்.

"இந்த அடி தாங்காமல் மூன்று பேரும் மண்டை யுடைந்து செத்துப் போய் விட்டார்கள்...."

"அடடா...அப்புறம், தாணுக்காரன் அவனை அடிக்கல்லை! தூக்கிலே போட்டுட்டா ளொல்லியோ?"

"இல்லை. இல்லை. அவன் குஸ்தியில் எப்படி கெட்டிக்காரனோ அப்படியே புத்தியும் இருந்தது. இதற்குள் விடியற்காலம் மணி 4 ஆகிவிட்டது. எதிர்த்த சத்திரத்தில் 'மடசாம்பிராணி' என்ற பெயருள்ள ஒரு கூலி தினம் தூங்குவான். அது பயில்வானுக்கு தெரியும். உடனே சத்திரத்திற்குப்போய் அவனை எழுப்பி 'டேய். ஒரு சாக்குமூட்டை இருக்கிறது. அதைக் கொண்டுபோய் கொள்ளிடத்தில் போட்டுவிட்டு வந்தாயானால் ஒரு ரூபா தருவேன்' என்றான். "சரி, சரி" என்று கூலி ஆவலோடு வந்தான். பயில்வான் ஜேபியில் பார்த்தான் ஒரே ரூபாய்தா னிருந்தது 'இந்த மடசாம்பிராணியை ஒரு யுக்தியால் ஏமாத்தணும்' என்று சட்டென்று உள்ளேபோய் 3 பிணங்களையும் தனித்தனி ஒரு சாக்கில் போட்டு கட்டி முதலில் ஒரு மூட்டையை ரேழிக்கு கொண்டுவந்து கூலி தலையில் வைத்து 'போட்டுவிட்டு வா, கூலி தருகிறேன்" என்றான்.

கூலியும் போட்டுவிட்டு வந்தான். இதற்குள் பயில்வான் அதேமாதிரி மற்றொன்றையும் கட்டி ரேழியில் வைத்திருந்தான். இவன் திரும்பி வந்ததும் "என்னடா, மடமே! மூட்டை போட்டால் அழுத்திவிட்டு வாவேண்டாமா! அது இங்கு திரும்பி வந்து விட்டதேடா. மறுபடி இதைக்கொண்டு போட்டால்தான்



கூலி......" பார்த்தான் மடசாம்பிராணி இதுவும் அதேமாதிரிதான் இருந்தது. நிஜம் தானென்று நம்பி இதையும் போட்டுவிட்டு வந்து பார்க்கிறான்! அதே மூட்டை ரேழியில் உட்கார்ந்திருந்தது! பக்கத்தில்

பயில்வான் குண்டாந்தடியை சுழட்டிக் கொண்டு மீசையைக், கோபத்தோடு முறுக்குகிறார். பயந்தே போய்விட்டான். "இதை நல்லா அமுத்திட்டு வாரேனுங்க" என்று சொல்லி பேசாமல் தூக்கிக் கொண்டு, தேமேனுபாவம் ! கொள்ளிடத்திற்குப் போனான். வழியில்,

"இந்த கரையிலிருந்து வீசி எறிந்தால் போதாது. ரயில்வே பாலத்தின் மேலிருந்து 'தொப்' பென்று போட்டால் அமுங்கிப் போகும்" என்று நினைத்து பாலத்தின் மீதேறினான்.

இதற்குள் மணி 4½ ஆகிவிட்டது. வைகறையாய் விட்டபடியால், நம்ம பக்கத்தாத்து சுப்பாதீக்ஷதர் ஸ்நானம் செய்துவிட்டு ஜபம் செய்து கொண்டிருந்தார். அன்று இன்னும் இருட்டாகவே இருந்தது. வேறொருவரும் ஆற்றிற்கு வரக் காணோம். தீக்ஷதருக்கு என்னமோ மனதில் பயமாகவே இருந்தது. 'அகாலத்தில் வந்து விட்டோமே' என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக் கொண்டிருந்தார். அப்பொழுது 'தொபுகடீர்' என்று பின்புறத்தில் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தார் அவ்வளவுதான் பேயோ பிசாசோ என்று உளறியடித்துக்கொண்டு, வெள்ளி கூஜாவையும் மறந்து ஓடலானார். பார்த்தான் மட சாம்பிராணி ! "அடேடேய். மூட்டை பயில்வான் வீட்டுக்கு மறுபடியும் ஓட்றது டோய் !' என்று பின்னால் 'விடாதே பிடி, பிடி, என்று கத்திக்கொண்டு ஓடினான் தீக்ஷதருக்கு மணலில் ஓட முடியவில்லை. தொந்தி குலுங்கிற்று. மயக்கம்போட்டது. ஸ்மரணையற்று தலை குப்புற மணலைக் கவ்விக்கொண்டு விழுந்துவிட்டார். ஆனால் மட சாம்பிராணியா விடுபவன்? ஒரே ஓட்டமாக ஓடி தீக்ஷதரைப் பிடித்து பக்கத்திலிருந்த ஒணான் கொடியால் காலையும் கையையும் கட்டி, அலாக்காய் தூக்கிக் கொண்டு அங்கே இருக்கிறதே, யானைக் கண்டாத மடு, அதில் போட்டுவிட்டு, நன்றாய் அமுக்கிவிட்டு நீந்தி கரைவந்து சேர்ந்தான்."

"ஐயைய்யோ....தீக்ஷதர் போய் விட்டாரா ?'

"ஆமாம்"

"பின்னே அதோ வருரே....அம்மா 'பே, பே, பிசாசு, பிசாசு' என்று மணி ஓடினான்.

நிஜமாகவே அப்பொழுது ஒரு தாம்பிரச் செம்பு எடுத்துக்கொண்டு, பஞ்சாதி சொல்லிக்கொண்டு வந்தார் தீக்ஷதர் !

கதை முடிந்தது. கற்கண்டு...... இல்லை........மணியின் சாக்லேட்டு தித்தித்தது.



நண்பா நகை விருந்து

சிரேஸ்தர்:—“ஒரு கடிதத்தில் உலகத்திலுள்ள பெரிய முட்டாளுக்கு என்று மாத்திரம் விலாசம் எழுதிப் போட்டால் நீங்கள் அதை யாருக்கு அனுப்புவீர்கள்?”

போஸ்ட் மாஸ்டர்:—“அதைக் கேட்கவும் வேண்டுமா? அதை உமக்கே திரும்ப அனுப்பி விடுவோம்.”

* * *

மாஸ்டர்:—“இட்டு! நீ பெரிய முட்டாளா அல்லது நானா என்று இப்பொழுது தெரியவேண்டும்?”

இட்டு.—“எஜமான்; எனக்கு தெரியாது. ஆனாலும் நானில்லிங்க அது!”

* * *

அத்தை:— (நாட்டுப் பெண்ணை) “சுகமாய்த் தூங்கினாயா?”

நாட்டுப் பெண்:—“தலையைத் தலையணையில் வைத்துத் தூங்கிப் போய்விடுகிறேன். விழித்துக் கொண்டவுடன் எழுந்து விடுகிறேன். எப்போது சுகப்படுவது?” என்று பதில் சொன்னாள்.

* * *

தையல்காரன்:—“ஸார்! இன்னும் கோட் தைத்த கூலி பாக்கி கொடுக்கவில்லையே!”

ஸார்:—“நான் இன்னும் கோட்டு வாங்கின துணிக்கே பணம் கொடுக்க வில்லையே.”

* * *

பையன்:—“அப்பா! அப்பா!! வாங்கோ! ராமுவை அடுத்தாத்து பையன் அடிக்கிறான்.”

அப்பா:—“சீக்கிரம் அவங்கப்பாவை கூப்பிடு!”

* * *



“என்னையா தபால் பெட்டியை மறைத்துக்கொண்டு நிற்கின்றீர். நான் கடிதம் போட வேண்டும்.”

“ஐயா! சற்று பொறுங்கள்; கடன்காரர் ஒருவர் வருகிறார். அவர் கடந்து போகுமட்டும் சற்று மறைந்து கொள்கிறேன்.”

"வாங்க ஸார், கொஞ்சம் காப்பி சாப்பிட்டுவிட்டு போகலாம்!"

"சே, ஆபீஸ் வேளையிலே காப்பி குடிக்கிறதே யில்லை. ஏனென்னு அது தூக்கத்தைக் கெடுத்து விடுகிறது!"

* * *

உபாத்தியாயர்:—(மாணவனைப் பார்த்து) "ஒரு வண்ணான் தன் கழுதையை நன்றாய் அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டால் அதனை தடுப்பேன். இதனை என்ன குணமென்று சொல்வாய்?'

மாணாக்கன்:—(சட்டென்று) "சகோதர பாவம் அல்லது சகோதர வாஞ்சை என்று தான் சொல்வேன்."

வி. ஆர். ஜி. ராகவன்.

* * *

ஒருவர்:—"என்ன சார்! ஒங்காத்துக் கெதிரில் நேத்து குப்பல்?"

மற்றவர்:—"ஓ, அதுவா? நான் ஹார்மோனியம் வாசித்துக் கொண்டிருந்தேன். அதிக ஜனங்களோ?"

ஒருவர்:—"ஜனங்களல்ல, நாற்கால் பிராணிகளில் சில."

மற்றவர்:—"இவை உங்களுக்கு எப்படித் தெரியும்? தாங்கள் அக்கூட்டத்திற்கு தலைமை வகித்தீர்களோ? அல்லது அதில் கலந்துகொண்டிருந்தீர்களோ?"

(உத்தியோகத்தில் அமர்ந்து ஒரு கேஸ் கூட பிடிக்கவில்லையே என்று கவலைகொண்ட) பால் பரிசோதகர்:—"அடே பையா! உன்னிடம் கொடுக்கும்போது உன் எஜமான் பாலில் என்ன போடுகிறார்?"

பையன்:—"நான் சொன்னு என்ன தரீங்க?"

பால் பரிசோதகர்:—(ஒருகேஸ் மாட்டிக் கொண்டதென்ற உற்சாகத்துடன்) "இந்தா அரை ரூபாய்! உண்மையைச் சொல்லிவிடு."

பையன்:—"ஒரு உழக்கும், ஒரு ஆழாக்கும் போடுவார் சார்!"

* * *

உபாத்தியாயர்:—"இதென்ன படம்?"

"நரி, சார்"

உபா:—"சீ சீ, நாய்க்கும், நரிக்கும் வித்தியாசம் தெரிய வில்லையா? 'நாய்' என்று ஐந்து தடவை சொல்லு."

பையன்:—"நாய் சார், நாய் சார், நாய் சார், நாய் சார்."

உபா:—"சீ, சீ, நிறுத்தடா போதும்."

எஸ். குருசாமி ஐயர்.

* * *

"பொம்மையைக் குளிப்பாட்டுகிறாயே ஏன்?"

"அதற்குக் கடந்த இரண்டு நாட்களாக விடாத ஜுரம் நூற்று டிகிரி மட்டும் போய் விட்டது. அது தான் குளிர்ந்த ஜலத்தை விட்டுக் குறைக்கிறேன்."

சினிமா கலை வளர்ச்சி

—:(0):—

சினிமா கலை வளர்ச்சியைத்தான் கலா ரஸிகர்களனைவரும் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது முன்னேற்றமடையவேண்டுமென்னுமெண்ணத்தை முன்னிட்டு ஆங்காங்கு பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இக் கலையை, எந்த வழியில் அபிவிருத்திக்குக் கொண்டு வரவேண்டுமென்றல்லவா முக்கியமாகக் கவனிக்கவேண்டும்? அதை விட்டுவிட்டு, சங்கங்கள் பெயரளவிற்கு ஏற்பட்டு விட்டால் மட்டும் போதாது.

எவ்விதமான படங்களைப் பிடித்தால் இக் கலை வளர்ச்சிக்கு ஏதுவுண்டாகுமென்பதையே முதலில் கவனிக்க வேண்டும். தற்காலம் தமிழ்நாட்டில் புராணேதிகாசங்களைப் படம் பிடிப்பதில்தான் அநேக முதலாளிகள் மும்முரமாய் வேலை செய்து வருகின்றார்கள். அத்தகைய படங்கள் இதுவரை என்ன பயனளித்ததோ? அல்லது இனிமேலென்ன பயனளிக்கப் போகின்றதோ? நமக்குத் தெரியவில்லை. மேல்நாட்டாரிடம் புராணக் கதைகளில்லையா? அவர்களேன் அப்பாட்டிக் கதைகளைப் படமெடுப்பதில்லை. நமது புராணேதிகாசக் கதைகளுள் அநேகத்திற்கு ஆதிபீடம் வடஇந்தியா அல்லவா? அவ்வாறிருக்க, அங்கிருந்து வெளிவரும் ஹிந்தி, உருது படங்களெல்லாம் சமூக சம்பந்தமான கற்பனைக் கதைக

இது யார்? குழந்தை நடிகை வசந்திபோலிருக்கிறதே! "மகாத்மா" என்னும் ஹிந்தி படத்தில் ஹரிஜனப் பெண் சம்பாவாக நடித்த சிறுமியா! ஆமாம். ராஜகுமாரி போலத் தோன்றும் இவள், "அமரஜோதி" என்னும் படத்தில் காட்சியளிக்கிறாள்.

ளாக வல்லவா இருக்கின்றனா? அது ஏன்? என்பதைத் தமிழ்ப்பட முதலாளிகள் கவனிக்கவேண்டும்.

ஒரு படம் உன்னத முறையில் சிறந்து வெளிவருவதற்கு முதற்காரணம் கதையினமைப்பே. தற்போதைய நவநாகரீக வாழ்க்கையின் நடவடிக்கைகளையனுசரித்து, கதைகளை ஜோடித்து, படமெடுக்கவேண்டும். இதைத் தவிர்த்து பல ஆண்டுகளாக, ஆடியாடி, பாடிப் பாடி; பார்த்தும் கேட்டும் சலித்துப் போன பாட்டி பழங்கதைகளால் எந்த விதம், யாரிடம் கலைவளர்ச்சி யடையுமென்று நாம் எதிர்பார்க்க முடியும்? இன்னுஞ் சில புராணேதிகாசக் கதைகளும் வெளிவந்து விட்டால் தொல்லையே ஒழிந்து விடும்.

ஆகவே, சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் இரஸிகர், விமர்சகர் சங்கங்கள் அத்யாவசியமில்லா விஷயங்களில் சர்ச்சை யிடுவதை விட்டுவிட்டு; கலை வளர்ச்சியின் விஷயங்களில் கவனத்தைச் செலுத்தி, கூடுமான வரை, நல்ல கதைகளை ஜோடித்து எழுதி, அவைகளைப் படம் பிடிக்கும் முதலாளிகள் பயன் படுத்துமாறு தூண்டவேண்டும். அதுவே, நாம் தற்சமயம் செய்யத் தக்கதாகும்.

வி. ராஜரத்தினம்.

மீண்டும் பேசும் பட உலகில் தோன்றிப் பிரகாசிக்கும் ஸ்ரீமதி. ஏனுக்ஷி ராம ராவின் பரத நாட்டியக் காட்சி.

சத்தியசிலன்

"சத்திய சிலன்" அல்லது "தந்தைசொல் மறவா தனயன்" என்ற சரித்திரசம்பந்தமான தமிழ்ப் பேசும்படம், திருச்சி தியாகராஜா டாக்கீஸாரால் பம்பாய் வாடியா மூவிடோனில் தயாரிக்கப்பட்டு முடிவடைந்து வருகிறது. இதில் ஸ்ரீமான் எம். கே. தியாகராஜ பாகவதரும், ஸ்ரீமதி எம். எஸ். தேவசேனுவும் முக்கிய பாத்திரமெடுத்து நடிப்பது சினிமா அபிமானிகள் யாவருக்குந் தெரிந்த விஷயம். இப்படம் சகல அம்சங்களையும் நன்கு கவனித்து எடுக்கப்பட்டு வருவதால் வெற்றியோடு விளங்குமென்றும், தமிழ்ப் பட உலகிலேயே சிறந்து ஒளிருமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

கதைச் சுருக்கம்

ஜோதிபுரி! மிக அழகிய பெயருடைய அவ்வூர் அரசன் தர்பாரில், சத்திய சிலனின் தந்தை பிரதம மந்திரி! அவர் மரணமடைகிறார். அந்தப்பதவி வேறொருவருக்குக் கிடைக்கிறது. வீர இளைஞன்

தயாராகிவிட்டது !

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள் !!

விடுதலை ! விடுதலை !!

சிறைப்பட்ட பல கன்னிகைகள்

விடுதலை !!!

இன்னும் இதைவிட தன் காதலுக்காகவும், தன் தேசத்திற்காகவும் வீறுகொண்டெழுந்து வெற்றி மாலையுடன் மண மாலையும் சூடிய பல அரிய நிகழ்ச்சிகள் நிறைந்த

சத்தியசீலன்

அல்லது

தந்தைசொல் மறவாத் தனயன்.

டைரக்டர்
B. சம்பத்குமார்

நடிகமன்னர்—M. K. தியாகராஜ பாகவதர்

உயர் நடிகை—M. S. தேவசேனா

முதலியவர்கள் சிறப்புடன் நடித்த

மகத்தான தமிழ் பேசும் பட[ம்]

படம் வேண்டுவோர் எழுதுக:—

தியாகராஜ டாக்கீஸ்

திரு

சத்திய சீலனுக்குச் சேனாதிபதி பதவி தரப்பட்டது.

இது ஒரு வீம்புக்காரனுக்குப் பிடிக்கவில்லை. இவன் பெயர் பிரதாபருத்திரன். இந்த பக்கா பேர்வழி வாய்வீரன்; மிகக் கோபக்காரன்; அடாத செயல்புரியும் அட்டகாசத் துஷ்டன். ஆனால் இவனுக்கு செல்வாக்கு அதிகம். ஏனெனில், இவன் ஜோதிபுரி ராணியின் சகோதரியின் மகன். இவனுக்கு சேனாதிபதியாகி, அந்த மூடக்குடன் பிரேமாவதி எனும் பூங்கொடியை மணம் புரிந்துகொள்ள ஆசை. பிரேமாவதி, அழகி—சிங்காரி. அவளைக் கண்டு பிரதாபருத்திரன் சொக்கினான். மேலும் பிரேமாவதி, ஜோதிபுரத்து ராணி மகள்! சொல்ல வேண்டுமா ருத்திரன் காம வெறியை!

.சத்தியசீலனை ஒழித்தால்தான், தனக்குச் சேனாபதிப் பட்டம். ஆகவே, பிரதாபருத்திரன், நமது கதாநாயகனைச் சிறைப்படுத்துகிறான்.

ருத்திரன் பாடு ரொம்ப குஷி! மிக அலங்காரமாக மறுதினம் தர்பாருக்கு வந்தான்.

“சத்தியசீலன் இல்லை; ஆகவே சேனாதிபதி வேலை நமக்குத்தானே” என்று துள்ளினான் பிரதாபன்.

என்ன ஆச்சரியம்! சத்தியசீலன் திடீரென தர்பாருக்கு வருகிறான். அதுகாண, பிரதாபன் மனம் துடிக்கிறது. சத்தியசீலனுக்கு சேனாதிபதி பட்டத்தை மன்னர் தருகிறார். அதுகண்டு பிரதாபன் மனம் வெடிக்கிறது.

இடையே, காதல் காட்சி! கம்பீர வீரன் சத்தியசீலனை, அரசகுமாரி அழகிய பிரேமா கண்டாள்! அதேநேரம், இருவரையும் மன்மதன் இணைத்து விடுகிறான்.

சினிமாவில் அனைவரும் விரும்புவது எது?

நடிப்பேயன்றோ?

வடநாட்டுச் சினிமா நடிகர்கள் போன்று தென்னாட்டுத் திலகம்

ஸ்ரீமான் பி. கே. ராஜா சாண்டோ

திருப்பூர் டாக்கீஸ், லிமிடெட்., **வஸந்த சேனாவில்**

சகாரனாக நடிக்கிறார்.

வி. ஏ. செல்லப்பா, என். கிருஷ்ணன், தனலக்ஷ்மி

முதலியோரும் நடிக்கிறார்கள்.

சரஸ்வதி ஸினிடோனில் தயாராகிறது.

வில் வெளிவரும் தேதியை எதிர்பாருங்கள்.

வோர் எழுதுக:—

ப்பூர் டாக்கீஸ் லிமிடெட்., திருப்பூர்.

ஒருதினம் நீரில் விழுந்து தெளிகிருள் பிரேமா! சத்தியசீலன் அவளைக் காப்பாற்றுகிறுன். காதல்! காதல்!! இருவருக்கும் பேச்சிதுவே!!!

பிரேமாவை, பிரதாபனுக்கே மணம் செய்ய மன்னர் முடிவு செய்கிறுர்.

"மாட்டேன், எனக்குக் காதலர் சத்தியசீலரோ" என்றுள் பிரேமா.

பெண்ணுக்கு ஏன் இந்தப் பிடிவாதம். அதுவே காதல்!

பிரதாபன் ஒரு சூழ்ச்சி செய்கிறுன். பிரேமாவை அவனே திருடிக்கொண்டு போகிறுன். பிறகு, யாரோ செய்தது போல நடித்து, அவளை அழைத்து வந்து அரசரிடம் விடுகிறுன். தன் வீரத்தைக் காட்ட வேண்டுமென்பது அவன் ஆசை!

மன்னனும் மயங்கி விட்டான். சத்தியசீலன் நாடு கடத்தப்பட்டான். "பிரேமா! பிரேமா!" என்ற மந்திரமே ஓதிக் கொண்டு அலைகிறுன் வீரன்.

காதல் இல்லையேல் சாதல்—சரி என எரியில் விழத் துணிகிறுன். தன் தந்தை உருவம் தண்ணீரில் தெரிகிறது. கண்டு தேறுகிறுன்.

பிரதாபன் களியாட்டம். வெறியாட்டம், கன்னியர் கற்பழித்தலில் காலந் தள்ளுகிறுன். சத்தியசீலனைப் பிடித்து மறுபடி சிறையிலடைக்கிறுன்.

ஜோரான கலியாண நாள் வந்தது.

பிரேமாவுக்கும், பிரதாபனுக்கும் திருமணம்! மண உடையுடன் பிரதாபன், சிறை சென்று சத்தியசீலனிடம் பெருமை அடிக்கிறுன். சத்தியசீலனின் சகா, சந்திரமாருதன் உதவியால் பிரதாபன் பிடிபடுகிறுன்; சிறையில் அவனைப் போட்டு விட்டு, சத்தியசீலன் கலியாண கோலத்தில் சென்று பிரேமாவை மணக்கிறுன்!

வாடியா மூவிடோனின்
பிரதம நடிகை
ஸ்ரீமதி. குல்ஷன்.

பிரேமாவுக்கு இரகசியம் [தெரியாது. விதியை எண்ணுகிறாள் மங்கை! விம்மி விம்மி அழுகிறாள்.

பிரேமாவுக்கு சத்தியசீலன் காட்சி தருகிறான். "ஹா! காதலா—" என்றாள் பிரேமா. ஒரே ஆலிங்கனம்! முத்தங்கள் சாமாரி! காதலில் அவர்கள் மூழ்கி விட்டனர்.

பிரதாபனின் துர்க்குணம், மன்னருக்கு விளக்கப்படுகிறது. அவனை நாட்டை விட்டுத் துரத்தி விடுகிறான் அரசன். சத்தியசீலனும், பிரேமாவும் . ஆனந்த வாழ்வு வாழ்கின்றனர்.

இத்தகைய நவரச மிகுந்த தமிழ்ப் படம் கூடிய சீக்கிரம் சென்னையில் காட்டப்படுமெனத் தெரிகிறது.

வங்காளி நடிகை ஸ்ரீமதி. மேனகா.

ஸ்ரீமான் ராஜா சாண்டோ தாம் டைரக்ட் செய்யும் "வஸந்த சேனை" என்னும் தமிழ்ப் படத்தில் சஹாரனாக நடிக்கும் காட்சி.

தயாராகிவிட்டது !

வெளிவரும் தினத்தை எதிர்பாருங்கள் !!

M. K ராதா
S. V. வெங்கடராமன்
கிளவுன் சுந்தரம்
12-வயது H. சங்கரன்
T. N. மீனாக்ஷி
K. R. ஜெயலக்ஷ்மி
P. R. மங்களம்
10-வயது பாப்பா

K. P. காமாக்ஷி ஆகியோர் நடித்த

உன்னத சமூக சீர்திருத்த தமிழ் பேசும் படம்

சந்திர மோஹனா

அல்லது

சமூகத் தொண்டு.

நாட்டிய சக்கிரவர்த்தினி

ராகினி தேவியின் டான்ஸ் பார்க்கத்தக்கது.

டைரெக்ஷன் :—ராஜா சந்திரசேகர்.

விவரங்களுக்கு :— தந்தி : Movietone.

மோஹன் மூவிடோன் கம்பெனி,

157, தெற்கு மாசி வீதி, மதுரை.